# JNÂNA BODHINI

### A TAMIL MAGAZINE AND REVIEW.

DEVOTED MAINLY TO

**LITERATURE, SCIENCE, PHILOSOPHY & RELIGION.**

EDITOR:

M. S. PURNALINGAM PILLAI, B.A.

**Vol. VII. No. 1.—January 1904.**

CONTENTS.

PAGE.

A Note to the Tamilar............The Editor............1
An Elegy on V. G. S............Achalambikai Ammai...2
Reformation of the Universities...Sankaranarayana Pillai...4
Herbert Spencer............Viswanathan, B.A......7
Gladstone on Public Speaking......Subramania Pillai, B.A....10
Who is a Hindu?............Ramasamy Aiyer, B.A......10
What are our Defects?.........Kanthimathinathan, B.A......12
Familiar Quotations—Thiruvachakam..........Salivadi........15
The True History of Castes............Vedanayakam........18
Govinda Lakshmi Amman..........Kaviraj Subramaniam......23
Friendship............Iswara Aiyar............25
Chinnathambi:—A Novel........K. C. Duraisami Pillai......28
Mercy and Music............Kallappiran Pillai, B.A.......35
EDITORIAL NOTES—Dr. Bain—Annie Besant's Lectures—Ramnad Rajah's Demise—Dharmapala's Letter—Justice Telang's Memorial—Plague—The Age of Manikka Vachakar—Madura Tamil Sangham—Shakespeare's Twelve Heroines............

*Madras*:

THOMPSON AND CO.,

53, POPHAM'S BROADWAY.

1904.

ओं

# JNANA BODHINI

## A TAMIL MAGAZINE AND REVIEW

AND AN ORGAN OF

**THE "MADRAS LITERARY BUREAU"**

DEVOTED MAINLY TO

**LITERATURE, SCIENCE, PHILOSOPHY & RELIGION.**


***Editor:***

M. S. PURNALINGAM PILLAI, B.A.

***Secretary:***

K. C. DURAISAMI.



**Vol. VII—January to December, 1904.**


**SUBSCRIPTION:**

| | | |
|---|---|---|
| ***For Patrons*** | ... ***Annual*** | ... ***Rs. 5.*** |
| ***For others*** | ... ***Annual*** | ... ***Rs. 2-8.*** |

# ஞானபோதினி


சம்புடம் **VII. 1904** ௵ ஜனவரி௴ முதல் டிசம்பர்௴ முடிய.


வருஷ சந்தா:— { போஷகர்களுக்கு ரூ 5/
{ சந்தாதாரர்களுக்கு ரூ 2/8


Madras:

THE "MADRAS LITERARY BUREAU,"

BLACK TOWN.

1905.

Thompson & Co., Printers, Madras.

# "ஞானபோதினி".

—※—

## சம்புடம் VII.

### 1904ஞு ஜனவரிமீ முதல் டிசம்பர்மீ முடிய.


அகஸ்தியனார்—K. C. D. ... ... 205
அமைப்புப்படியே மணம்—பெருமாள் நாயுடு ... 111
அரிச்சந்திரன் கனவு—முனிசாமி ... ... 113
அனிச்சம்—பூர்ணலிங்கம்பிள்ளை ... ... 117
அன்பின் வன்மை—சி. யஸ். சொக்கலிங்கம்பிள்ளை ... 85
அஹல்யா—திருச்சிற்றம்பலம் பிள்ளை ... ... 107, 153
இந்திய சர்வ கலாசங்க மசோதா—பத்திராதிபர் ... 281
இடையனும் கலைஞனும்—M. கோபால கிருஷ்ணையர் ... 333
இரக்கமும் இன்னியமும்—கள்ளப்பிரான்பிள்ளை பி. ஏ. ... 34
இரங்கற் பாக்கள்—அசலாம்பிகையம்மை ... ... 2
இரங்கற்பா மாலை—கா. கோபாலாச்சாரி ... ... 144
இல்வாழ்வியல்—திருச்சிற்றம்பலம்பிள்ளை ... 106
உலகயாத்திரை—சர்வஜன சகோதரி ... ... 371
கம்பன் இராமாயணம்—தி. வேங்கடராம ஐயங்கார் ... 164
கம்பசூத்திர விபேதனம்—தி. சண்முகம்பிள்ளை ... 289
கம்பராமாயண அருங்கவி விளக்கம்—தி. வேங்கடராம ஐயங்கார் 219
கல்வி வரலாறு—வரதராஜ ஐயங்கார், பி. ஏ. ... ... 168
கவிமலர்ப் பிரயோகம்—பூர்ணலிங்கம்பிள்ளை பி. ஏ. 68
கிளாட்ஸ்டன் புத்திமதி—சுப்பிரமணியம்பிள்ளை பி. ஏ. ... 10
குண்டலகேசியின் விருத்தாந்தம்—M. V. மீனாக்ஷி சுந்தரம் ... 283
குலசேகரி—K. S. வரதாச்சாரி பி. ஏ. ... ... 261
கோவிந்த லட்சுமியம்மன்—மு. கவிராஜ சுப்பிரமணிய பிள்ளை 23
சர்வ கலாசாலைகளின் சீர்திருத்தம்—சங்கர நாராயண பிள்ளை 4
சாதிவரலாற்றுண்மை—வேத நாயகம் ... ... 18
சாமுவேல் ஸ்மைல்ஸ், டாக்டர்—பத்திராதிபர் ... 161
சிவபெருமான்—வாசுதேவ முதலியார் ... ... 179
சின்னத்தம்பி—கா. ச. துரைசாமி ... 28,47,96,141,186, 215
சுகாதார தருப்பணம்—தி. செல்வகேசவராய முதலியார், எம். ஏ. 249,291
326
சூல்—ஜயராம்பிள்ளை ... ... 175
சூளாமணிநாடகம்—V. K. அரங்காசாரியர் ... 306,341,385
செல்வியம்மன் விருத்தம்—கவிராஜ சுப்பிரமணிய பிள்ளை ... 91
தமிழர் பழமை—V. கனகசபை பிள்ளை, பி. ஏ. பி. எல். ... 226, 246
தமிழருக்கு அறிக்கை—பத்திராதிபர் ... ... 1
தமிழ்ச்செய்யுளாராய்தல்—திரவியம்பிள்ளை ... 109
தமிழ்ச்செய்யுளாய்தல்—ஷை ... ... 65
தர்மபாலர், கைத்தொழிற்கல்வி—நாராயணசாமி ஐயர் 171
தற்கொலை வினாவிடை—தேவதாசன் ... ... 129

திருமாலின் பன்னிருநாமப் பொருள் விளக்கம்—தி. வேங்கடராம ஐயங்கார் 267,329,381
திருவாசகத்தில் நாயன்மார்கள்—வெங்கடாசலம் ... 115
திருவாங்கூர் ஜாம்புவான்—திருமணம் வேதாத்திரிசதாசமுதலியார் K. C. D. 196
திவான்பஹதூர் கிருஷ்ணஸ்வாமிராவ் சி. ஐ. இ.—பத்திராதிபர் 81
நட்புறல்—ஈஸ்வர ஐயர் ... ... 25
நம்மவர் குறைகள் எவை ?— காந்திமதிநாத பிள்ளை பி. ஏ. ... 12
நவீன சிலாசாசன வாராய்ச்சி—சுதேசமித்திரன் ... 377
நவீன தமிழ்ப்புத்தகங்கள் — ... ... 314
நவீன பத்திரிகா வித்தார மஞ்சரி— ... ... 404
நவீன பிரசுரங்கள் — ... ... 227
நவீன பிரசங்கத்திரட்டு— ... ... 272
நான்குசேவீடர்—S. அனவரத விநாயகம் பிள்ளை, எம். ஏ. எல். டி. 210
நூதன தமிழ்ப் பிரசுரங்கள் ... ... 408
படிப்புப்பெரிதா ? அனுபவம் பெரிதா ?ஜி சுப்பிரமணிய ஐயர், பி. ஏ 318
பத்திராதிபர் குறிப்புக்கள்— 37,78,119,158,197,241,321
பலதுறைக் கலாவிசேடக் குறிப்புக்கள்— ... 278,316,359 406
பலதுறை விசேடக் குறிப்புக்கள்— ... ... 232
பல பத்திரிகாவிஷய சங்கிரகம்— ... ... 230
பழம்பெரும் பூடகை—சாலிவாடி ... 15,74
பிரவேசப் பரீக்ஷை—பத்திராதிபர் ... ... 41
பீதி நிவாரணம்—அனவரத விநாயகப்பிள்ளை எம். ஏ. எல். டி. 100
புத்தகக் குறிப்புக்கள்— ... 121,157,199
புத்தக வரவு— ... ... 280
புலவர்மாட்சி—பத்திராசிரியர் ... ... 201
பெயின்ஆசிரியர்—அனவரத விநாயகம் பிள்ளை, எம். ஏ. எல். டி. 42
"மதராஸ்லிடரரி பூரோ"—பத்திராதிபர் ... ... 361
மாதர்க்கிதமான பக்கங்கள்— ... ... 356,396
மாதத்தமிழ்ப்பத்திரிகைகளி னுள்ளுரைகள்— ... 200
மாறக்கீழ்நாடு—T. A. இராமலிங்கம் பி. ஏ. ... ... 310
மைக்கேல் யாதவன்—சங்கர நாராயணன் ... ... 86
வங்காளா நாலணு பண்டு—V. முத்துக்குமாரசாமி பி. ஏ. ... 253
வளையாபதி—M V. மீனாக்ஷிசுந்தரம் B. A., M. R. P. A. ... 369
விசேஷ அனுபந்தம்— ... ... 236
விருத்தி நம்பிக்கை—ஈசுரமூர்த்தி ... ... 71
விவசாயக் கல்வி—ஸர்வஜன மித்திரன் ... 380
வேதாந்த தேசிகன் வைபவம்—V. K. அரங்காசாரியர் 59,133,190,221
ஜஸ்டிஸ் C. சங்கரன்நாயர், ஹானரபில்—K. C. துரைசாமி ... 243
ஜீவ சுபாவதத்துவ விளக்கம்—V. N. ஐயங்கார் M. A. 257,337,366
ஜெப்பானியர்—பத்திராதிபர் ... ... 128
ஸரஸ்வதி—V. முத்துக்குமாரசாமி B. A. ... 298,347, 387
ஹிந்து என்பவர் யார் ?—இராமஸ்வாமி ஐயர் பி. ஏ. ... 10
ஹெர்பர்டு ஸ்பென்ஸர்—விஸ்வநாதன்பி. ஏ, ... 7

# ஞானபோதினி

மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்—திருக்குறள்.

சம்புடம் VII. | 1904௵ ஜனவரி௴ | சஞ்சிகை 1

## A NOTE TO THE TAMILAR.

## தமிழருக்கு அறிக்கை.

சென்ற ஜூலைமாதத்துடன் ஞானபோதினியின் ஆறாஞ் சம்புடம் முடிந்தது. ஆனால் அந்தமாதத்தின் சஞ்சிகை இப்பொழுது தான் வெளியாயது. அதன் காரணம் தமிழரனைவரும் அறிவர். சென்னையிலிருந்து தமிழ்ப்பரிதியென எங்குந் தமிழொளி பரப்பித் தமிழன்னையைச் சிறப்புறச்செய்த வித்வான் சூரிய நாராயண சாஸ்திரியார் சென்ற ஆறுமாதங்களில் பிணிவாய்ப்பட்டு கடைசியில் சென்ற நவம்பர்மாதத் துவக்கத்தில் பரகதியடைந்தனர். அன்னார் இப்பத்திரிகையை அன்னை போன்று பாராட்டி வந்தனராதலின் பிறர் கையில் இப்பேதையை ஒப்புவித்திலர். எனக்கும் சென்னைக்குப்போக அவதி கிடைத்திலது. இக்காரணங்களினால் ஜூலை சஞ்சிகை காலத்தில் வெளிவரத் தாயமாடிற்று. அதற்குச் சந்தாதார்கள் எங்களை மன்னிக்க வேண்டுகிறோம். பேதைப்பருவத்தில் அன்னையை யிழந்தபடியால், உலக வசனத்துக்கொப்ப இப்பத்திரிகை விஷயத்தில் பெற்றப்பன் சிற்றப்பனாகானென்ற வுறுதியைத் தமிழுலகிற்குத் தெரிவிக்கின்றேன். ஏனெனில் இப்பத்திரிகையை வாங்கி வந்தவர்களும் இதற்கு விஷயதானஞ் செய்தவர்களும் தாயிழந்த தனிநிலையை

யுன்னி இரங்கிக் கைதூக்குவர் என்பது திண்ணம். இவ்வேழாஞ் சம்புட முதல் வெளி நாட்டிலிருப்பினும் யானே இதை எடுத்து நடாத்தி விருத்தி செய்யத் தீர்மானித்திருப்பதால் ஆங்காங்குள்ள என் நண்பர்களனைவரும் இதற்குள்ள குறைவுகளை நீக்கு மாறு தக்க வுதவி புரிவர் என்று நம்புகின்றேன். இப்பத்திரிகை இலாபத்தைக் கருதிப் பிறப்பிக்கப்பட்ட தன்றாதலால், சந்தாத் தொகை விருத்தியாகும் விஷயத்தில், அடுத்த சம்புட முதல் வருடக் கட்டணத் தொகையைக் குறைக்கச் சித்தமாயிருக்கின்றேன். தமிழ் வித்வான்களும் ஆங்கிலங் கற்றதமிழர்களும் இப்பத்திரிகையை அபிமானிக்க வேண்டுகின்றேன்.

தற்காலத்திலுள்ள தமிழ்ப் புலவர்கள் சரித்திரத்தைக் காப்பாற்றக் கருதி ஒவ்வொரு புலவரின் சரித்திரத்தையும் அவர் செய்துள்ள நூல்களையும் சுருக்கி வரைய விரும்புகின்றேன். இவ்விருப்பம் நிறை வேறுதற் பொருட்டு தமிழ் நாடுகளிலுள்ள வித்வான்கள் தங்கள் வரலாறுகளை சுருக்கி யெழுதித் தாங்கள் பதிப்பித்திருக்கும் புத்தகங்களையும் அனுப்பப் பிரார்த்திக்கின்றேன். சந்தாதார்கள் தங்கள் சந்தாத்தொகையையும், விஷயதானஞ் செய்பவர்கள் தங்கள் விஷய தானத்தையும், பத்திராதிபர்கள் தங்கள் பத்திரிகைகளையும், நூல்களாக்கியோர் தங்கள் நூல்களையும், ஞானபோதினிப் பத்திராதிபர், கோயமுத்தூர் என்ற விலாசத்திற்கு அனுப்பும்படி வேண்டுகின்றேன்.

பத்திராதிபர்

---

## AN ELEGY.

காலஞ்சென்ற கிறிஸ்டியன் காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர்
வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார் அவர்கள்
பிரிவாற்றமற் கூறிய

## இ ர ங் க ற் பா க் க ள்.

---

சீரியர்தஞ் சிரமணியாஞ் சிவநேயக்
கோவிந்த சிவனு ரென்னும்
பேரியைந்த தவமலையிற் பிறந்ததமிழ்
மதக்களிறே பீடார் நந்தம்
ஆரியநற் குலவிளக்கே யருந்தமிழ்ப்பெண்
விழிமணியே வமுதே தேசார்.

சூரியநா ராயணப்பேர் புனையருமைச்
சோதரமே சுகுண மாலே. (1)

உலகிருளைப் புறத்தோட்டு மொருகடவுட்
டிருநாம முடைமைக் கேற்ப
அலகில்பல மாணவர்த மகவிருளைப்
புறத்தோட்டி யகிலந் தோன்ற
விலகொளியை மிகவிரிக்கு மப்பரிதி
யெனமேதை விளக்கங் காட்டிப்
பலகலையு முலந்தேரப் பண்ணியனின்
பெருங்கருணை பகரற் பாற்றே. (2)

அந்தணர்தங் குலக்கொழுந்தா யிருந்தமிழ்மென்
கொடிப்பாவை யவலந் தீர
வந்தணைநற் கொழுகொம்பாய் மகிழ்ந்தடையு
மாணவர்க்கு வாழு டற்ற
கந்தமலர்க் கற்பகமாய்க் கற்றவர்க்குத்
தீங்கனியாய்க் கனிந்த கேண்மை
நந்தலிலா வெமர்க்ககத்து ளினித்திடுந்தெள்
ளமுதாய நாவ லோயே (3)

உளம்பரவும் பெருங்கருணை யூற்றெழலால்
கல்விநலத் தெவரு மோங்கி
வளம்பரவ மெய்வருத்தம் பாராமற்
பல்காலும் வகுத்துத் தேற்றும்
இளம்பரிதி மாற்புலவ நீ விண்ணு
டேகியமை யியல்பா? யெங்நா
விளம்புதற்கு மிகநடுங்கும் விதி வலிக்கிங்
கென்செயலுண் டந்தோ, வந்தோ! (4)

நம்போல்வான் மேனடக்க நாம்விலகிக்
கீழ்நடத்தல் நவையா மென்றோ
அம்போ ருகத்தொருவற் கருந்தமிழ்த்தேன்
புகட்டுதற்கோ? அமரர் வீணிற்
றம்பெரும் புலவரென நாணிலராய்ப்
பெறுதருக்குத் தவிர்த்தற் கேயோ
எம்போல்வா ருள்ளுருக அந்தரஞ்சென்
றசைந்தமைதா னெதற்கோ கூறாய், (5)

ஆலவா யரனார் திருவடி மலர்க்கே
யன்புபூண் டொழுகிய வுண்மை

சாலவே யெவர்க்குந் தெரித்திடுங் குறிப்போ
தகுதிசால் கார்த்திகை பகுளச்
சீலமார் சோம வாரமற் றதனிற்
செழும்பிர தோடமுஞ் சேர்ந்த
மேலதாநாளி லவனடி நிழற்கண்
மேவினின் றயர்வுயிர்த் தனையே (6)

அசலாம்பிகையம்மை.

---

## REFORMATION OF THE UNIVERSITIES.

## சர்வகலா சாலைகளின் சீர்திருத்தம்.

---

இந்தியாதேசம் மகாராணி கைவசமான காலத்தில் ஏற்பட்ட சர்வகலா சாலைகள் மூன்றே. அவை கல்குத்தா, பம்பாய், சென்னை நகரங்களிலுள்ளன. அலகபாத்திலும் பஞ்சாப்பிலும் உள்ள சர்வகலாசாலைகள் பின் ஏற்பட்டவை. ஆகமொத்தம் ஐந்து சர்வகலாசாலைகள் தற்பொழுது இந்தியாவில் நடைபெற்று வருகின்றன. அவற்றில் ஒவ்வொன்றும் ஒத்துநடப்பது ஒரு விஷயத்தில் மட்டுமே. அஃது யாதெனில் பரீட்சைகளுக்குப் பாடங்கள் ஏற்படுத்திப் பிள்ளைகளைப் பரிசோதித்தலே. பாடங்கள் விஷயத்தில் ஒரு சர்வகலா சாலைக்கும் மற்றொன்றிற்கும் ஏற்றத்தாழ்வுண்டு. சென்னையைவிட பரீட்சைக் கடுமை வேறிடங் கிடையாது. கல்குத்தாவில் பரீட்சைதேறுதல் எளிது என்று காணப்பட்டது. அதுபற்றி ஆண்டு பிரதம பரீட்சையில் தேறிவந்தவர்களை சென்னை சர்வகலாசாலையைச் சார்ந்த கல்லூரிகளில் எப். ஏ. முதல்வகுப்பில் சேர்க்கக் கூடாதென்று நம் கலாசாலை யதிகாரிகள் சுற்றுத்தர வனுப்பினர். இத்தகைய பேதம் ஏற்பட்ட படியால் எல்லாச் சர்வகலாசாலைகளையும் ஒரேதரப் படுத்தக் கருதி கர்ஸான்பிரபு கமிஷன்ஒன்றை ஏற்படுத்தினர். கமிஷனர்கள் ஒவ்வொரு முக்கிய மாகாணத்திற்கும் போய் கற்றுணர்ந்த பெரியோர் அபிப்பிராயங்களைப் பெற்று அவற்றின் சாராமிசத்தைத் திரட்டிப் புத்தக ரூபமாய் வெளிப்படுத்தினர். அப்புத்தகம் வெளிவந்ததும் அதை எல்லோரும் கவனித்து வாசித்தனர். கனம் நியாயாதிபதி குருதாஸ் பார்நஜியின் ஆட்சேபனைகளையும் கண்ணுற்றனர். ஆட்சேபனைகள் தக்கவையென்று கண்டு அவற்றைப் பத்திராதிபர்களும் பல கல்விமான்களும் தாங்கினர். பத்திரிகை வாயிலாய்க் குறைவுகளை எடுத்துக் கூறினர். அவற்றில் முக்கியமானவை பின்வருவன. இந்தியா முழுவதிலும் ஒரு சாதியாரிலர். ஒவ்வொரு சாதியாருக்கும் கல்வி நாகரிக வித்தியாசமுளது. இயற்கை வித்தியாசங்களைக் கவனியாமல் மலையையும் மடுவையும் சமப்படுத்த முய

ல்வதுபோல நாகரிகத்திற் சிறந்த சமவிலை நிபுணர்களின் தனயற்கும் மலைவாசிகளாய் நாகரிகமருவிய நன்மக்கள் சுதற்கும் ஒருவிதமாய்க் கல்வி பயிற்றக் கருதல் தகாது. இக்காரணங்களைக் கவனித்து கவர்ன்மெண்டார் சில திருத்தங்கள் செய்தனர். பின்னும், ஆட்சேபனை ஆஸ்பதங்கள் நீங்கவில்லை. பாடமேற்படுத்தல் பரீட்சித்தல் முதலான விஷயங்களைச் சீர்திருத்தாமல் செனேற்று, ஸிண்டிக்கேற்று என்ற சபைகளின் அங்கத்தினர் தொகையைப்பற்றியும் முன்னதனில் பட்டதாரிகள் தெரிந்தெடுக்கும் அங்கத்தினர் நூற்றில்பதின்மர், மீந்த தொண்ணூறுவரும் சர்க்காரறிந்து நியமிக்கப்படுவர், என்பதைப் பற்றியும், பின்னதனில் ஒவ்வொரு முக்கிய கல்லூரியின் தலைவர் அங்கத்தினரா யிருத்தலைப் பற்றியும், இன்னோரன்ன விதிகளடங்கின மசோதா வெளிவந்தது. இதையுற்று நோக்கின் மூன்றுவிஷயங்கள் புலப்படும். முதலில், ஆங்கிலேயர் சர்வகலாசாலைச் சபைகளில் மிகுந்திருக்கவேண்டும்; இரண்டாவது, ஆங்கிலப்படிப்பைக் குறைத்தல் அவசியம்; மூன்றாவது, ஆங்கிலக்கல்விபயிற்றுவிக்கும் கலாசாலைகளைக்குறைக்கவேண்டும். முதல் விஷயத்தை சர்க்காரே செய்துவிடலாம். காரணங்கேட்டால், இராஜதந்திரமெனலாம். இரண்டு மூன்றும் விஷயங்களை ஏற்பாட்டிற்குக் கொண்டுவருதல் எங்ஙனம்? இரண்டாந்தரக் கல்லூரிகளைக் களையவேணடு மென்றனர் முதலில். பின்னர் தற்சமயம் அவைகல்விப்பயன் விளைவிக்கின்றன வாதலால் களையவேண்டுவதில்லை என்றனர். பின் என்னசெய்கிறது? சம்பளத்தை உயர்த்திவிட்டால் கல்லூரிகளுக்கு வருபவர்தொகை குறையும். பரீட்சைகளில் தேறுமவர்தொகை சிறிதாகும். பட்டதாரிகள் எண்ணத்தில் குறைந்தால் ஆங்கிலேயருடைய பதவியைத் தேடார். சுயவாளுகை விரும்பிக் கூக்குரலிடுவோர் குறைவர். சர்க்காருக்கு இத்தகைய வுட்கருத்துக்க ளிருக்கலாமென்று சுதேசிகள் யூகித்தனர். இவற்றைச் செவிசாற்றிய இராஜப்பிரதிநிதி வெகுண்டனர். ஆங்கிலப் படிப்பை விருத்திசெய்வதே தங்கருத் தென்றனர். இன்னும் இதுவிஷயம் முடியவில்லை. பள்ளிச் சம்பளத்தை உயர்த்திவிடுவார்க ளென்பது உறுதி. உயர்த்தினால் கற்பவர் தொகைகுன்றும் என்பது சொல்லாமலே விளங்கும். உண்மையில் சுதேசிகளுக்கு ஆங்கிலக்கல்வி அபிவிருத்தி யாகவேண்டுமென்ற எண்ணம் அதிகாரிகளுக்குளதேல், சர்வகலாசாலைகள் சோதனைச்சாலைகளா யிருத்தலுமன்றி போதனைச்சாலைகளாகவும் அமைக்கலாம்; உயர்ந்த பௌதிக சாஸ்திரங்களைப் பட்டதாரிகளுக்கு அவற்றில் கற்பிக்கலாம்; படிப்புச் செலவைக்குறைத்து இயற்கையில் யூகிகளாயிருப்பவர்களைக் கைதூக்கலாம். இவையொன்றையும் காணோம். மசோதா சட்டமாய்விடும். சட்டச்சபையில் சுதேச அங்கத்தினர் முறையீடு வியர்த்தமாகாதிருக்க ஈசனைப் பிரார்த்திக்கின்றேன்.

நம் தேசத்திலுள்ள சர்வகலா சாலைகளெல்லாம் முற்றிலுங் கேவல ஸ்திதியி லிருக்கின்றன வாதலால் அவற்றை அழித்துப் புதுமாதிரியில் ஆக்க

வேண்டுமென்ற அவசியம் நேரிடவுமில்லை. அத்துணையவசிய மிருப்பதாகக் காட்டினருமில்லை. ஆதலினுல் சர்வகலா சாலைகள் மசோதாவைப் பின்வருமாறு மாற்றுதல் உத்தமமென்று காங்கிரஸ் மகாசபையில் சுரேந்தரநாத் பாநர்ஜீ எடுத்துக்கூற யாவரும் அதை அங்கிகரித்தனர்.

1. ஒவ்வொரு சர்வகலாசாலைக்கும் தனித்தனியே சட்டம் ஏற்படவேண்டும்.

2. முதலிலுண்டான சர்வகலாசாலைகள் மூன்றில் ஒவ்வொன்றிலும் 200-க்குக் குறையாத சகாக்கள் இருக்கவேண்டும். அவ்விருநூற்றுவரில் 80-பேர்களை பட்டதாரிகளும் 20-பேரைப் பாடவகுப்பு அங்கத்தினரும் தெரிந்தெடுக்கவேண்டும். பஞ்சாப் அலகபாத்தில் இதுபோன்றே செய்துகொள்ளலாம்.

3. தற்போதுள்ளபடி சகாக்கள் ஆயுள் பரியந்தம் வேலையிலிருக்கவேண்டும். ஆனல் குறிப்பிடும் தவணைகளில் அன்னர் சபைக்கு வராதிருந்தால் அவர்களை நீக்கிவிடலாம்.

4. ஸிண்டிக்கேற்று சபையில் சட்டப்படி இத்தனைபேர் இருக்கவேண் வேண்டுமென்னும் நிபந்தனையை ஒழிக்கவேண்டும்.

5. சர்வகலாசாலைப் பட்டம்பெற்றவர்கள் பட்டம்பெற்றுப் பத்துவருஷம் கழிந்தபின் வோட் கொடுக்கும் பாத்தியதை பெறவேண்டும்.

6. சர்வகலாசாலைகளைச் சேர்ந்த கல்லூரிகளில் வாசிக்கும் பிள்ளைகளும் வாத்திகளும் குடியிருக்க வசதிசெய்தல், கல்லூரிசிலைபெறச்செய்ய ஏற்பாடு செய்தல், இந்த நிபந்தனைகளை நீக்கவேண்டும்.

7. கல்லூரிகளைச் சர்வகலாசாலை அங்கிகரித்தல் நீக்கல் சர்வகலாசாலையதிகாரிகளுக்கு இருத்தல்வேண்டும். இவ்வங்கிகரித்தலும் சர்க்காருடைய அனுமதி பெறலாம்.

8. கல்லூரிகளைச் சோதனைசெய்ய ஸிண்டிக்கேற்றால் நியமிக்கப்படுபவர்கள் சர்க்கார் படிப்பி லாகாவிற்கும் உதவிபெற்றும் பெருதுமுள்ள கல்லூரிகளுக்கும் சம்பந்தப் படாதவர்களா யிருத்தல்வேண்டும்.

9. நாளதுவரை யுள்ளபடி சர்வகலாசாலைச் சட்டங்களையும் சில்லரை விதிகளையும் ஏற்படுத்தும் அதிகாரம் ஸினேட்டுக்கே இருத்தல்வேண்டும். அதுவும் சர்க்கார் அனுமதி பெற்றுவரலாம்.

சங்கரநாராயண பிள்ளை.

---

# HERBERT SPENCER.
## ஹெர்பெர்ட் ஸ்பென்ஸர்.

---

இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து விளங்கிய தத்துவ ஞானிகளிற் சிரேஷ்டர். சென்ற ஐம்பது வருடங்களாகத் தத்துவ விசாரணையிலே காலத்தைக்கழித்தனர். இவர் ஆக்கிய நூல்கள் பல. இவர் பெயரறியாக் கலைஞர் இலர். இவர் மரணமானது சென்ற டிசம்பர் மாதத்தில், இவருக்கு வயது 83. விருத்தாப்பியமாயினும் வியாதியா லவத்தைப்படவில்லை. மரண தருவாய் வரை ஞாபகசத்தியிருந்தது, மதி மயங்க வில்லை. இவர் இறந்து போமுன் வேண்டிக்கொண்டபடி இவருடைய உடம்பு தகனஞ் செய்யப்பட்டது.

இவர் 1820 ஆம் எப்பிரல்௴ 27-உ டேர்பி நகரத்திற் பிறந்தனர். இவர் பிதாவிற்கு வாத்திமைத் தொழில். இவர் சிறு பிள்ளையாயிருந்த பொழுது பூச்சிகளைப்பிடித்துவைத்து அவை உருவமாறுதலைக்கவனித்து வந்தனர். பதின்மூன்று வயது வரைத் தந்தையிடங்கற்று வந்து, பின்னர் மூன்று வருஷஞ் சிற்றப்பனிடம் கல்வி பயின்றனர். சிற்றப்பனாகிய பாதிரியிடம் இளைஞர் கணிதம் நன்கு கற்றனர். பெற்றப்பன் சிற்றப்பன் இருவரிடமுங் கற்றதைத்விர வேறுபாடசாலைகளிலாயினும் கல்லூரிகளிலாயினும் ஸ்பேன்ஸர் வாசித்ததில்லை. பதினாறுமாண்டில் விலவளைவை சம்பந்தமான ஒரு விஷயத்தை சிவில்இஞ்சிநீர் பத்திரிகையில் நிரூபித்தனர். அடுத்த வருஷத்தில் சர் சாரல்ஸ் பாக்ஸ் என்பவருடன்லண்டன் பர்மிங்காம் ரெயிலில் வேலை பார்த்து வந்தனர். அதே அலுவலில் அதிக ஊதியம் கிடைக்கக் கூடியதாயிருந்தும் இருபத்தோராம் பிராயத்தில் அவ்வேலையை ஒழித்து வீடு நோக்கிச் சென்றனர். ஊரில் கணிதத்தையும் மற்றுஞ் சில்லரைப்படிப்புகளையும் பயின்று வந்தனர். ஒன்றில் மட்டுந் தலைகொடுத்து அதிலேயே காலத்தைப் போக்குதல் நலமன்றென்றுநினைத்துப் பலவழிகளிலும் உழைத்தனர். ஆனால் எந்த விஷயமாய் உழைத்தபோதிலும் களையாடிக்குக் கண் காசின்மேலென்றபடி உயிர்த்தோற்றங்களைப் பற்றி சாத்திர வொழுங்கில் ஆராய்ச்சி செய்தலிலே இவருக்குக்கண்ணுயிருந்தது. சொரூபங்கள் வரைவதில் இவருக்கு எப்பொழுதும் ஆநந்தம். புற்பூண்டுகளைச் சேர்த்துக் காட்சி செய்தனர். புது மாதிரியாய் அச்சுவார்க்குங் கருவியொன்று கண்டு பிடித்தனர். இரண்டாண்டு இப்படிக் காலங்கழித்தனர். பின்னர் லண்டன் மாநகரத்திற்குச் சென்று பத்திரிகைகளுக்கு எழுதி வரும்படிசெய்ய முயன்றனர். போதுமானது கிடைக்கவில்லை. இவர் வரைந்தனுப்பிய விஷயங்களை அங்கிகரித்த பத்திரிகைகள் ஸிவில் இஞ்சிநீர், ஸாயிஸ்ட், பிலஸாபிக்கல் மாகஸின், நான் காண்பேர்மிஸ்ட் என்பனவே. இவர்தலை நகருக்கு வருமுன்னர் ஆட்சி

முறை என்பதைப்பற்றி அனேக கடிதங்கள் வரைந்தனர். அவற்றை ஒருங்கே சேர்த்துப் பதிப்பித்தனர். கடினமான கருத்துக்களமைந்த புத்தகமாதலால் அது புத்தக சந்தையில் விரைந்து விலையாகவில்லை. 1848-ஆ. மறுபடி எழுத ஆரம்பித்தனர். எக்கானமிஸ்ட் என்றபத்திரிகைக்கு இவர் தவருது எழுதி வந்தது தவிர, மற்றுமனேக பத்திரிகைகளுக்கு அற்புதமான வியாசங்களை வரைந்தனுப்பினர். இவற்றைச் சிலர் கவனித்தனர். இவர் பெயர்பிரகாசிக்க ஆரம்பித்தது. ஏனெனில் அரசமுறை குடிமுறை இவற்றைப் பற்றிய குழப்பம் ஐரோப்பாகண்டத்தில் அத்தருணம் உண்டாயிருந்தது. ஆட்சிமுறை இன்னதென்று அறிய விரும்பினவர் பலர். இவருக்கு ஒரு கருத்து மட்டும் மனத்தில் தடித்தது. அவயவங்களுள்ள செந்துக்கள் ஒன்றினின்றொன்று உற்பத்தியாயிருத்தல் வேண்டும். அஃதன்றி, ஞானமும் வழிக்கமான ஏற்பாடுகளும் அத்துணையே வளர்ந்திருத்தல் வேண்டும். திடீரென்று ஒன்றுண்டானதில்லை. உயிர் படிப்படியாய்ப் பலவகைப் பிராணிகளிற்றோன்றிக் கடையில் மனித சொரூப மடைகிறது. இக்கருத்து நாளுக்கு நாள் முதிர்ந்தது. நாற்பதாம் வயதும் எட்டியது. அப்பொழுது தம்முடைய தத்துவக்கோட்பாட்டை ஒழுங்குப் படுத்தினர். அதன் சுருக்கம் இவண் தருகின்றும்.

"உலகெக்கும் பிரகிருதியும் ஒட்டமும் ஓயாமல் மாறிமாறிச் சேர்கின்றன. இப்புதிய சேர்க்கைப் பிரிவாலுண்டானவையே நாம் பார்த்துணர்ந்தறியும் பொருள்கள், பிரகிருதி சேருதலால் உற்பத்தி. அச்சேர்க்கை யாகும்பொழுது ஒட்டங்குறைகின்றது. ஒட்ட மதிகரித்தல் பொருள்க ளழிவின் குறி. ஒன்றோடொன்று சேராதிருந்தவஸ்து இறுகுதலே உற்பத்தியாகும் செந்துவின் முழுவதிலும் பாகங்களிலுங் காணலாம். வானம், பூமி, மனம், குடி, வழக்கம், சட்டம்-இவையனைத்தும் உண்டானவிதம் இதுவே."

இராஜரீக வுற்பத்தி இவ்விதம் என்பதைச் சிறிது விளக்குவாம். முதலில் மனிதர் தனியர். ஒருவரையொருவர் பட்சித்தார். காட்டுத்தன மிகுந்த புராதன மனிதர் பிறவற்றால் துன்பம் நேரிடும் பொழுது ஒன்று சேர்தலால் மிக்க நன்மையுண்டாமென்று கண்டனர். பிறர்மேல் படையெடுத்தலிலும் சேர்க்கைப்பலம் மிகுதி என்று தெரிந்தனர். இப்படிக் கூட்டங்களாகப் பிரியும்பொழுது ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைவன் ஏற்பட்டான். திடகாத்திரமும் இயற்கைப்புத்தியின் நுட்பமும் உள்ளவனேதலைவனுயினன். சத்துரு இருக்கும் வரை உடல் வலி சிறக்கும். பின்னர் கூட்ட வொழுங்கு ஏற்படும்பொழுது மதி சிறக்கும். இவ்வண்ணமாய் நாகரிக விருத்திக்குத்தக்கபடி மதியுள்ளான் மன்னனுயினன். பின்னர் அரசபரம்பரை ஏற்பட்டது. இனி அறிவு வளர வளர ஒவ்வொருவனும் தன்னை யாளுஞ் சத்தி பெறுவான், அப்பொழுது அரசன் என்பது ஏடுபடும். ஆங்காங்கு சுயாதிகாரம் உண்டாகும்.

மனித வனுபவத் தொகையே மதத்திற்கும் சன்மார்க்கத்திற்கும் மூலம். நியாய அந்நியாயமுண்டானதும் இவ்விதமே. அனுபவத்தில் உயிர் வாழ்தலுக்கு அனுகூலமானது நியாயம், சன்மார்க்கம்; பிரதி கூலமானது அந்நியாயம், கெட்ட வொழுக்கம்.

இவர் ஆக்கிய நூல்களாவன;-மூலங்கள் (First Principles). அவை உயிர் மூலங்கள், உள மூலங்கள், ஜனசமுக மூலங்கள், சடங்கு மூலங்கள், குடி முறை மூலங்கள், என பல தரத்தனவாம். அன்றியும்சன்மார்க்க சாதனங்கள் (Data of Ethics),கல்வி, (Education), ஜனசமுகசாத்திரப்பயிற்சி (The Study of Sociology), மனித இராசாங்க வாதம் (The Man *versus* The State,) வியாசங்கள் (Essays) இவற்றையும் ஆக்கினர்.

டார்வின் என்பவர் தம்முடைய கொள்கையை வெளிப்படுத்து முன்னரே ஸ்பென்ஸர் தம் கொள்கையை வரையறுத்து வைத்தனர். டார்வின் அவயவவுயிருண்டானது படிப்படியாய் என்று மட்டுங் காண்பித்தனர். ஸ்பென்ஸரோமனோதத்துவங்களும் மதசட்டதிட்டங்களும் உண்டானவிதம் அங்ஙனந்தான் என்று விளக்கினர்.

இவர் 1882-ஆம் அமெரிக்காவிலுள்ள ஐக்கிய மாகாணங்களுக்கு யாத்திரை போயினர். ஆண்டுள்ள விநோத சாத்திரப் பயிற்சியியே இவரவண் போகும்படி தூண்டிற்று. அமெரிக்கரே முதலில் இவரை ஞானியென்று கண்டனர். அன்னூரே இவருடைய உள நூலையும் ஜன சமுகக்கணக்கையும் (Social Statics) பாராட்டினர். இவர் யாத்திரை சென்ற காலத்தில் இவரைக்கண்டு பேசாத பெரியோரிலர். இவரைப் பள்ளிப்பிள்ளைகள் தெருக்களில் கூடிப்பார்த்தனர். அமெரிக்கருக்கு இவர் சொல்லிய விஷயம் கவனிக்கத்தக்கது. 'விரைவிற் செல்கின்றீர், அவகாசம் கொண்மின்.'

இவருடைய புத்தகங்களால் இவருக்கு இலாபமில்லை. 1850-ஆம் த்தில் 'ஜன சமுகக்கணக்குகள்' வெளியாயிற்று. 750 பிரதிகள் பதிப்பிக்கப்பட்டன. இவை செலவாகுதற்கு பதினான்கு வருடங்கள் சென்றன. 1855-ஆம் த்தில் உளநூல் மூலங்கள் வெளி வந்தது. 750 பிரதிகளே பதிப்பிக்கப்பட்டன. பன்னிரண்டாண்டுகளிற் இவை அழிந்தன. முதலில் இவர் பதிப்புக்களெல்லாம் கையைக்கடித்தன. இருபத்து நான்கு வருடங்கள் சென்ற பின் இவருடைய நூல்கள் விற்றவரும்படி அவற்றின் செலவைக்காத்தது. 'முயற்சி மெய் வருந்தக்கூலி தரும்' என்ற முதுமொழி இவருக்குப் பொருந்தாமற் போயிற்று. கீர்த்தி கூலியாகுமாயின் இவருக்குக் கிடைத்த கூலிக்குக் கணக்கில்லை.

இவருடைய நண்பர்கள் பலர். பிரெஞ்சு இந்திய வித்வான்களையே இவர் மதித்தனர். இவர் அடிக்கடி லூயிபிளாங்க் என்பவரைப் புகழ்ந்தனர்.

இங்கிலாந்தில் இவருக்கு அத்தியந்த சிநேகர் பின் காலத்தில் ஜியார்ஸ் எலி யற்று என்ற பெயரால் விளங்கிய 'மேரியான் ஈவான்ஸ்' என்னுமாதே.

விஸ்வநாதன் பி. ஏ.

---

## GLADSTONE ON PUBLIC SPEAKING.

## கிளாட்ஸ்டன் புத்திமதி.

---

பிரசங்கத் தேர்ச்சியி லவாவுற்ற இளைஞர் ஒருவர் மிஸ்டர் கிளாட்ஸ்ட னுக்கு அதைப்பற்றி ஒரு விருபம் வரைந்தனர். அதற்கு அந்த மகான் ஒரு தபாற் சீட்டில் தம்கருத்தை வரைந்தனுப்பினர். நந்தேச வாலிபர்களும் அவையிற் கூச்சமறப்பேச விரும்புவராதலால், அவருடைய புத்திமதி இவர் கட்கும் பயன் விளைக்குமென்று கருதி அதை இவண் தமிழிற் றருகின்றும்.

1. தெளிவான பாஷை யுபயோகிக்கப் பழகவேண்டும். சிறு வார்த்தை களையே கையாளவும் வேண்டும்.

2. வாக்கியங்களெல்லாம் சிறிதாயிருத்தல் வேண்டும்.

3. ஒவ்வொரு வார்த்தையையும் தெளிவாய் உச்சரிக்க வேண்டும்.

4. பிறர் குற்றங் காணுதவாறு நாமே நம்முடைய வழக்கு முகாந்தரங்க ளைத் தீரவாராய வேண்டும்.

5. எடுத்துப் பேசப்புகும் விஷயத்தில் முற்றிலும் பழகி அதைப் பாடப் படுத்துவோமாயின் தக்க பதங்கள் தாமே வரும்.

6. சபையார் எண்ணத்தைக் கவரக் கருத்துளதேல் எடுத்தாளும் விஷ யத்தில் மட்டுந் தேர்ச்சி போதாது. பிரசங்கத் துவக்கமுதல் முடிவு வரை நம்முடைய கண்பார்வை அன்னூர் மேலிருத்தல் வேண்டும்.

சுப்பிரமணிய பிள்ளை. பி. ஏ.

---

## WHO IS A HINDU ?

## ஹிந்து என்பவர் யாவர்?

---

இந்தஸ், அல்லது சிந்து நதியின் பெயரிலிருந்து உண்டானது ஹிந்து வென்ற பதம். முகம்மதியர் இந்தப் பெயரால் இந்தஸ் நதிக்குக் கிழக்கே யுள் ளவர்களை அழைத்தனர். அங்ஙனமாயின் பஞ்சநதி கங்கை இவற்றின் பள்ளத் தாக்குகளிலுள்ள குடிகளுக்கே இப்பெயர் பொருந்தும். அவர்கள் ஆரிய ராயினும் அநாதியராயினும் கலவையாயினு மிருக்கலாம். இதுவே கல்குத்தா

நியாயாதிபதி பாநர்ஜியின் கொள்கை. வேருருவர் இப்பதம் புராதன ஆரிய சந்ததியைச் சார்ந்தவருக்கே பொருந்து மென்பர். ஆனால் ஆரியர் தாம் யாரென விசாரிக்கில் இந்நாட்டுப் பூர்வ கிரந்தங்கள் மௌனஞ் சாத்திக்கின் றன. ஐரோப்பிய நிபுணர்கள் மத்திய ஏஷியா, ஆபிரிக்கா, ஸ்காந்திநேவியா, ஏஷியா மைனர் இவற்றிலொன்றிலிருந்து ஆரியர் வந்தனர் என்று கூறு வர். திலகர் என்பவரோ அதற் கிணங்கிலர். ஆரியர் வட முனை தென் முனைக் கணித்தாயுள்ள நாடுகளிலிருந்து வந்தனரென்பர். ஆரியர் அந்நிய நாட்டாரென்று ஒத்துக்கொள்ளு மனைவரும் பிராமணர் க்ஷத்திரியர் வைசி யர்மட்டும் ஆரியரென்றும் சூத்திரர் பூர்வகுடிகளின் சந்ததியாரென்றும் எண்ணுகின்றனர். வேதங்களைப பின்பற்றிப்பிராமணக் கொள்கைகளையனுஷ் டிப்பவரே ஹிந்து என்பார் குருதாஸ் பாநர்ஜி என்ற நீதியதிபதி. தற் காலத்தில் இந்த இரண்டையு மறிபவர் தொகை குறுகி வருகின்றது. வேதக் கடவுளர் மறைந்தனர் போலும். சிவனும் விஷ்ணுவும் காளியுமே சிறந்து விளங்குகின்றனர். வேதங்களில் கோவில் விக்கிரகவாராதனையைப்பற்றி ஒன் றும் காண்கிலம். இல்லம் ஒவ்வொன்றிலும் ஆணும் பெண்ணும் ஓமத்தீவளர் த்து வந்தனை வழிபாடுசெய்து வந்தனர். இந்த விதமான வந்தனை இப் பொழுது நடைபெறவில்லை என்பது வெளிப்படை. வேதங்களை நிராகரிக்கும் சீக்கியர், சைனர், முதலியோர் ஆரியரல்லர் என்று ஏற்படும். இந்து மதம் எல்லா வகிப்பினர்க்கும் இடங் கொடுக்கும். ஒரே கடவுளுண்டென்னும் வேதி யரும், கடவுளரேது என்ற நாஸ்திகரும், சத்தி பூஜை செய்வோரும் ஹிந்து வென்றே அழைக்கப்படுகின்றனர்.

ஜாதி ஆசாரங் கவனிப்போர் ஹிந்து என்றூர் பத்தாசாரியார். ஜாதியை விட்டு வெளியே மணஞ் செய்பவன் ஜாதிப் பிரஷ்டனுகின்றுன். இதுவும் இடத்தைப் பொருத்திருக்கின்றது, இரஜ புத்திரர்களும் க்ஷத்திரியர்களும் தங் களினத்தில் பெண் கிடைக்கவில்லை யானுல் புற ஜாதியிலிருந்தே பெண் கொள்கின்றுர்கள். பிரம சமாஜத்தார் நாளது வரை ஹிந்துக்களாகவே பாவிக் கப்படுகின்றனர். ஹிந்து சட்டதிட்டமே அவர்களுக்கு முபயோகமாகின்றது.

நிஷேத வுணவை நீக்குவோர் இந்து வென்பர் ஒரு சாரார். சிலர் இறை ச்சி மீன் இரண்டும் நிஷேத மென்பர். வேறு சிலர் முன்னதும் மற்றுமொரு கூட்டத்தார் பின்னதும் நிஷேதமெனக் கூறுவர். இரண்டையும் உண்ணும் வகுப்பார் மாட்டிறைச்சி மட்டுந் தின்னலாகா தென்பர். இந்தக் கொள்கை யுடையார் ஸ்வாமி விவேகானந்தர். இவர் இஸ்லாம் கிறிஸ்து மதத்தைத் தழு வாமலும் மாட்டிறைச்சி உபயோகப்படுத்தாமலும் இருப்பவரை ஹிந்து வெனக் கொண்டனர். இதர ஜாதியார்களுடன் சாப்பிடுதல் தவறு என்பர் வைதிகர். லௌகிகர் அது தவறன்று, பார்த்தலினுல் தீட்டு ஏற்படாது, தொடுதல் மட்டுங் கூடாதென்பர். இவ்வண்ணம் அற்ப சொற்ப வித்தியாசங்

கள் மட்டுமே தற்காலத்தில் கவனிக்கப்படுகின்றன. ஜாதி ஆரம்பமானது பஞ்சாப்பில், ஆனால் அவ்விடத்தில் ஜாதி வித்தியாசம் அதிகமாகப் பாராட்டுவார் இக்காலத்திவில்லை. ஜாதி வித்தியாசங் குடி கொண்டிருப்பது தென் இந்தியாவொன்றிலேதான். சூத்திரர்செய்த மிட்டாய் முதலான சிற்றுண்டிகளை எல்லா வகுப்பாரும் பையப்பைய உபயோகித்து வருகின்றனர். சூத்திரர் தண்ணீர் வாரி விடுகின்றனர், வெந்நீர் காய்ச்சுகின்றனர், தாகத்திற்கு நீர் கொடுக்கின்றனர், அன்னம் மட்டும் பரிமாறுதல் கிடையாது.

பிராமணர்களைக்கொண்டு சடங்கு செய்விக்கும் ஜாதியார் ஹிந்துதானென்பர் மற்றொரு வகுப்பார். தற்காலத்தில் பிராமணர்கள் செய்யாதவேலையொன்றுமில்லை. சாணருக்குத் தண்ணீர் சுமப்பார்கள், சமயல் செய்வார்கள், வண்டி ஓட்டுவார்கள், இழுப்பார்கள், காசு கிடைத்தால் மானத்தையும் விற்பார்கள். முன் காலத்தில் சீர்மைக்குப் போய் வந்த பிராமணர்களை ஜாதியில் சேர்ப்பதில்லை. சுரேந்தரநாத் பாநர்ஜியின் இரண்டு புத்திரிகளையும் சீர்மைக்குப்போய் வந்தவாலிபரிருவருக்கே விவாகஞ்செய்துகொடுத்திருக்கின்றனர். பிராமணர்களே வந்திருந்து கல்யாணச் சடங்குகள் செய்துவைத்தனர். பிராயச்சித்தமொன்றும் நடக்கவில்லை.

ஆகவே ஜாதி ஐயமுற்ற ஒருவன் ஹிந்து தான் என்று கூறுதற்கு ஒருவித அடையாளமுமில்லை. ஒரு குழாத்தைச் சேர்ந்தபடியால் ஒருவன் ஹிந்துவென்று சொல்ல முடியாது. மதவொழுக்கமுந் தக்க வடையாளமன்று. ஜாதி வித்தியாசமும் அத்தகைத்ததே. விவாகஞ் செய்தலும் ஹிந்து வென்பதற்குக் குறியாகாது. உண்டுகளித்தலும் அறிகுறியன்று. எவனெவன் தான் ஹிந்துவென்று சொல்லிக் கொள்கிறானோ அவனைத் தடைசெய்ய வருவாரொருவருமிலர். வட விந்தியால் ஜாதி யவஸ்தை யென்பதே கடுகளவுங் கிடையாது தென்னிந்தியா வொன்றில் மட்டுமே இது அபரிமிதமாகக் குடி கொண்டிருக்கின்றது. சர்க்கார் உத்தியோகமும் ரெயில் பிரயாணமும் பாதிரிமார் முயற்சியும் காலாவதியில் ஜாதிக்கட்டுப் பாட்டை வேருடன் களைந்து விடுமென்பது திண்ணம்.

இராமஸ்வாமி ஐயர், பி. ஏ.

---

## WHAT ARE OUR DEFECTS?
## நம்மவர்கள் குறைகளெவை?

---

இந்தியர்களுக்கு வேளாண்மைபுராதனத்தொழில். தொழுதூண் சுவையினும் உழுதுணினிதே என்றனர் ஔவையாரும். கிருஷித்தொழிலைக்கௌரவமாகக் கொண்ட போதிலும் புது வழிகளில் நிலத்தைப் பண்படுத்தி மேனியை அதிகரிக்கச் செய்கின்றிலர். தவிரவும், நெசவு முதலிய கைத்தொழில்க

ளும் பன்னூற்றாண்டுகளுக்கு முன்னிருந்தவாறே இருக்கின்றன. புதிய கருவிகளை வருத்தி மேற்றிசையாருடன் போட்டி போடுபவர் கிடையா. மாரிக் குறைவால் பயிர் விளையாதொழியின் கைத்தொழில் மன்னுயிர் தாங்காது. பஞ்சம்மேலிடும். இது காரணத்தாலன்றோ வருஷா வருஷம் இந்தியாவில் ஒவ்வோர் பாகங்களில் பசிப்பிணியால் மாள்பவர் கோடி கோடியே.

1. நம்மவர்கள் ஒன்றையுந் துணிந்து முயற்சிப்பதில்லை. இதற்குக் காரணம் பல தேயங்கள் போய்ப் பாராததே. கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன் என்பது போலும். பிறந்த ஊரிலேயிருந்து பிறநாட்டுச் சமாசாரங்களை யறிய விருப்பங் கொள்ளாது போவதால் நம்மவர்கள் தாங்களே மேலோரென்றும் தங்களிலும் அறிவிலும் ஞானத்திலும்முதிர்ந்தோரிலரென்றும் தம்மேம்பாட்டுரையிற் காலத்தை யவமாக்குகின்றனர். ஒருவரை யொருவர் நம்புவதில்லை. பெரு முயற்சிகளுக் கெல்லாம் ஐக்கியமும் ஒற்றுமையும் விசுவாசமும் வேண்டும். ஆங்கிலக் கல்வி ஆரம்பித்து ஏறக்குறைய ஐம்பது வருடமாகின்றது. சாத்திரப் படிப்பு ஒன்று மட்டும் விருத்தி யடைகின்றதே யொழிய, கைத்தொழிற் படிப்பு, வாணிகப்படிப்பு முதலான தக்க ஊதியந் தரும் படிப்புகள் ஏற்படவில்லை. அவை ஏற்பட்டிருக்குமாயின், நம்நாட்டுத் தேங்காயும், தேங்காய் எண்ணெயும், சணலும், பருத்தியும், மிளகும், தோலும் இவைபோல்வன பிறவும் அயல் நாடுகளுக்குப்போய் பணிசெய்யப் பெற்று நன்னிலையில் நான்கு பங்கு விலைக்கு இவ்விடத்தில் அவை விலையாக விடமிராது. தற்காலத்தில் வாழை நார் முயற்சி எத்தனை துடுக்காய் நடந்து வருகிற தென்பதை நாமே பார்த்து வருகின்றோ மன்றோ? இதனால் வெளியாவதென்னவென்றால் நமக்கு உண்மையான.

2. தேசாபிமானமில்லை என்பதே. பசுபதி பாசத்தில் நம்மவர் தலையைக் கீறிக்கொண்டு நம்முடைய தேசத்தைவிட தத்துவஞான முதிர்ச்சி வேறெங்குங் கிடையாதென்ற வீண் கருவங் கொள்கின்றனரே யன்றி நம்முடைய நாட்டுச் சரக்கையே நாம் உபயோகப்படுத்த வேண்டும், அங்ஙனஞ்செய்து நம் தொழிலாளிகளை ஊக்கப்படுத்த வேண்டும், என்ற சுதேசாபிமானம் இன்னும் கிளம்பவில்லை. யந்திரங்களால் செய்யப்பட்டு வரும் சரக்குகள் விலை குறைந்தே யிருக்கும், கையாற் செய்த சாமான்கள் விலை கூடியேயிருக்கும். இதைக் கவனியாது அன்னிய நாட்டார் பொருளைக் கொள்ளைகொண்டு போவதைப் பார்க்கின்றோம். நன்னாட்டாரே அதைப் பெற்று நன்னிலை யடைய தக்கபடி முயற்சி செய்கின்றிலம். ஆங்காங்கு ஏற்பட்டிருக்கும் நூல் கடிதம் எண்ணெய், முதலான யந்தர சாலைகளும் அனேகமாய் ஐரோப்பியருக்கேசொந்தம். உலோகங்களைக் கோலாறுமுதலிய விடங்களிற் சுரங்கஞ்செய்து பயனடைவோரும் ஐரோப்பியரே. முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார் என்பது முதுமொழியன்றோ? நம்மவர் தினசரிகூலிவேலை செய்து காலங்கழிக்கின்ற

னர், நம்மைக் கருவிகளாக உபயோகப்படுத்திப் பெரும்பயன் பெறுபவர் புற நாட்டாரே.

3. தூரதேசப்பிரயாண நிபந்தனைகளால் நம்முடையதேசம் முன்னுக்கு வரவில்லை யென்பது மலைமேற் றீபம்போன்று விளங்கும். கப்பல்யாத்திரை செய்பவர் ஜாதிப்பிரஷ்டராவர் என்ற கொடியவிதியை யமைத்தபாவிக்கு ஏழேழு நரகமுங்காணுமோ? பன்னாடுகளையும் பலதிறத்தாரையும் பார்த்தலினாலன்றோ நம்முடையகுறை இன்னதென்று புலப்படும், நம்முடையவீண் கருவமுமடங்கும். அஃதன்றி கிணற்றி லடங்கிய தவளைபோன்று தன்றேசமல்லால் பிறிதொன்றில்லை என்ற வீண் எண்ணத்தை விழுங்கி விக்கிச்சாகின்றோம். ஜாதிமதத் துர் எண்ணங்கள் நம்மைவிட்டகன்றாலன்றி நாம் சிறப்புறுதல் எந்நாளு மிலதென்பது உறுதி.

4. முன்னிலைக்கு வரத்தக்க கல்வி நமக்குக் கொடுக்கவில்லை. பி. ஏ. எம். ஏ. க்கள் போதுமானபடி வருஷாவருஷம் சித்திபெற்று வருகின்றனர். பலவகைத்தொழில் முயற்சிக்குரிய படிப்புப் பரவவேண்டும். நமக்குமுதன்மையாய்த் தோன்றும் ஆங்கிலேயநாடும் கைத்தொழில் வாணிபத்தில் சிறிது காலந் துயிலுற்றபோது ஜெர்மனி, அமெரிக்காவின் ஐக்கியமாகாணங்கள் முன்வந்தன. சமீபகாலத்திற்றான் ஆங்கிலேயர் துயிலொழிந்து கண்விழித்தனர். எம்மூலையிலும் அமெரிக்கரும் ஜெர்மானியரும் நமக்கு முந்தினரே, அதற்குக்காரணம் யாதென்று விசாரணைசெய்யத் தொடங்கினர். புதியவை கண்டுபிடிப்பதிலும் உண்டுபண்ணுவதிலும் ஜெர்மானியரை மிஞ்சினவர் இத்தருணமிலர். நந்தேசத்தில் விளையுமியற்கைப் பொருள்களில் அனேகத்தை அவர்கள் கலவையாகச் செய்கிறார்கள். போலிவயிரக் கடுக்கன்கள் கோடிகோடியாய் இத்தேசத்தில் செலவாகின்றன. இந்தியநீலமும் அரக்கும் நந்தேச விளைபொருள்கள். முன்னது செடியினின்றும், பின்னது ஒருவிதப்பூச்சியால் ஆலமரத்தில் உண்டாவதென்றும் நாமறிவம். இவற்றிற்குப் பதிலாக ஜெர்மனிதேசத்தில் பலவற்றைச் சேர்த்து இவற்றினுஞ் சிறந்தகலவை நீலமு மரக்கு முண்டாக்கி யிருக்கின்றனர். அதனால் நம்முடைய சரக்கு விலையாகிறதில்லை. ஆதலால் காலம்போகாமல் துயிலொழிந்து எழுந்து கருமத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். தவறின், எந்நாளும் நாமிழிந்தவரேயாம்.

காந்திமதிநாத பிள்ளை. பி. ஏ.

# FAMILIAR QUOTATIONS.
# பழம் பெரும் பூட்கை.

---

## திருவாசகம்.

கறந்த பால் கன்ன லொடு நெய்கலந்தாற் போல—சிவபுராணம்.
மறைந்திட மூடிய மாயவிருளை
யறம் பாவமென்னு மருங் கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ் சோருமொன்பது வாயிற் குடிலை
மலக்கப்புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்கு— ஷை
நாயிற் கடையாய்க் கிடந்த வடியேற்கு— ஷை
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கு மாரியனே— ஷை
தில்லையுட் கூத்தனே தென் பாண்டி நாட்டானே— ஷை
யந்தமி லாரிய னுயமர்ந் தருளியும்— கீர்த்தித்திருவகவல்.
யெவ்வெவர் தன்மையுந்தன்வயிற் படுத்துத்
தானே யாகிய தயாபரனெம்மிறை— ஷை
பாண்டி நாடே பழம் பதியாகவும்— ஷை
பரமானந்தப் பழங்கடலதுவே— திருவண்டப்பகுதி.
யருச்சனை வயலு ளன்புவித் திட்டு
தொண்ட வுழவராரத் தந்த
வண்டத் தரும்பெறன் மேகன் வாழ்க— ஷை
தடக்கையினெல்லிக்கனி யெனக்காயினன்— ஷை
யானை முதலா வெறும்பீறாய— போற்றித் திருவகவல்.
கல்வி யென்னும் பல்கடற் பிழைத்துஞ்
செல்வமென்னு மல்லலிற்பிழைத்து
நல்குர வென்னுந் தொல்விடம் பிழைத்தும்— ஷை
நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்— ஷை
உலோகாயதனெனு மொண்டிறற் பாம்பின்
கலாபேதத்த கடுவிட மெய்தி— ஷை
தழலது கண்ட மெழுகது போல— ஷை
கொடிறும் பேதையுங் கொண்டது விடாதெனும்— ஷை
பசுமரத்தாணி யறைந்தாற் போல— ஷை
கற்று மனமெனக் கதறியும் பதறியும்— ஷை
பிறிவினை யறியா நிழலது போல— ஷை
கன்ன லுரித்த கனியே போற்றி— ஷை

தோளா முத்தச் சுடரே போற்றி— ஷை
யடி யொடு நடுவீ ரானாய் போற்றி— ஷை
யானேதும் பிறப்பஞ்சேனிறப்பதனுக் கென்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன் மண்ணாள்வான் மதித்துமிரேன்—

திருச்சதகம்.

வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி
யூனாகி யுயிராகி யுண்மையுமா யின்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென் சொல்லி வாழ்த்துவனே— ஷை
தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையா லெற்றுண்டு பற்றொன் றின்றி
கனியை நேர் துவர் வாயா ரென்னுங் காலாற்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்
டினியென்னே யுய்யுமா றென்றென் றெண்ணி
யஞ் செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனை— ஷை 3.
யாமார்க்குங்குடி யல்லோம் யாதுமஞ்சோம்— ஷை
மானிலாவிய நோக்கியர் படிறி‡* டை மத்திடுதயிராகி—ஷை 4.
எள்ளு மெண்ணெயும் போனின்ற வெந்தையே— ஷை 5.
தேனையமுதே கரும்பின் றெளிவே சிவனே— ஷை 6.
தேனைப் பாலைக் கன்னலின் றெளியை யொளியை— ஷை
பிழைத்தவை பொறுக்கை யெல்லாம் பெரியவர் கடமைபோற்றி ஷை
சிந்தை செய்கை கேள்வி வாக்குச் சீரிலம் புலன்களான்
முந்தையான காலநின்னை யெய்திடாத மூர்க்கனேன்— ஷை 8.
அழுகே னின்பா லன்பா கனமா யழல் சேர்ந்த
மெழுகே யன்னார் மின்னார் பொன்னார் கழல்கண்டு— ஷை 9.
திணியார் †மூங்கிலனையேன் வினையைப் பொடியாக்கி— ஷை
ஊனை நாடக மாடு வித்தவா— ஷை 10.

தாம் வளர்த்ததோர்
நச்சு மாமரமாயினுங் கொலார்— ஷை
செழிகின்ற தீப்புகு விட்டிலிற் சின்மொழியாரிற் பன்னாள்
விழுகின்ற வென்னை விடுதிகண்டாய்— நீத்தல் விண்ணப்பம்.
பொறுப்பரன்றே பெரியோர் சிறு நாய்கடம் பொய்யினையே— ஷை
இருதலைக்கொள்ளி யினுள்ளெறும் பொத்து— ஷை
கடலினுணாய் நக்கிடாங் குன்கருணைக் கடலினுள்ளம்— ஷை
கொம்பரில்லாக் கொடிபோலல மந்தனன் கோமளமே*— ஷை.

---

* வஞ்சகம் † வலி பொருந்தியவிளைந்த. ‡ இளமைச் செவ்வி.

ஆனை வெம்போரிற் குறுந்தூறெனப் புலனாலலைப்புண்டு— ஷை
தேனையும் பாலையுங் கன்னலையு மமுதத்தையுமொத்து— ஷை
மெள்ளனவே மொய்க்கு நெய்க்குடந் தன்னையெறும் பெனவே—ஷை
எறும்பிடைநாங்கூழென * ப் புலனாலரிப் புண்டலந்த— ஷை
பெரு நீரறச் சிறுமீன்றுவண்டாங்கு நினைப் பிரிந்த
வெரு நீர்மையேனை விடுதிகண்டாய்— ஷை
மலங்களைந்தாற்சுழல் வன்றயிரிற் பொருமத் துறவே— ஷை
மத்துறு தண்டயிரிற் புலன்றீக் கதுவக் கலங்கி— ஷை
மதுமதிப் போன்றென்னை வாழைப்பழத்தின் மனங்கனிவித்து—ஷை
கோழி சிலம்ப † ச்சிலம்புங் குருகெங்கு
மேழிலியம்பவியம்பும் வெண்சங் கெங்கும்— திருவெம்பாவை.
ஏதவனூரேதவன் பேராருற்றா ராரயலா
ரேதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய்— ஷை
பொங்குமடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ்சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்ப— ஷை
உங்கையிற்பிள்ளை யுனக்கே யடைக்கலமென்
றங்கப்பழஞ்சொற் புதுக்குமெம்மச்சத்தால்— ஷை
கல்லைப்பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத்தழுத்தி வினைகடிந்த வேதியனை ஷை
தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானை— ஷை
யொப்பாக வொப்புவித்த வுள்ளத்தா ருள்ளிருக்கு
மப்பாலைக் கப்பாலைப் பாடுதுங்கா ணம்மானாய்— ஷை
தேனையும்பாலையுங் கன்னலையு மொத்தினிய — ஷை
குற்றங்கணீக்கிக் குணங்கொண்டு கோதாட்டி
சுற்றியசுற்றத்தொடர் வறுப்பான் றொல்புகழே— ஷை
ஞானக்கரும்பின் றெளியைப் பாகை
நாடற்கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை யாயி னானை
கூத்தனை நாத் தழும் பேற வாழ்த்தி— திருப்பொற்சுண்ணம்.
வைத்த நிதி பெண்டிர் மக்கள் குலங்கல்வி யென்னும்
பித்தவுலகிற் பிறப்போ டிறப்பென்னுஞ்
சித்தவிகாரக் கலக்கந் தெளிவித்த
வித்தக தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ— திருக்கோத்தும்பி
ஒன்றாய் முளைத்தெழுந் தெத்தனையோ கவடுவிட்டு
நன்றாக வைத்தென்னை நாய்சிவிகை யேற்றுவித்த— ஷை
பேயேனதுள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனை— ஷை

* நாக்கப் பூச்சி. † ஒலிக்க.

கள்வன் கடியன் கலதி * யிவ னென்னுதே
வள்ளல்வரவர வந்தொழிந்தா னென்மனத்தே— ஷை
நாய்மேற் றவிசிட்டு நன்றாய்ப் பொருட்படுத்த— ஷை
ஒருநாம மோருருவ மொன்றுமில்லாற் காயிரந்
திருநாமம் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ—திருத்தெள்ளேணம்.
கறங்கோலை போல் வதோர் காயப்பிறப்போ டிறப்பென்னு—ஷை
கன்னு ருரித்தென்ன வென்னையுந்தன் கருணையினாற்— ஷை
கனவேயுந் தேவர்கள் காண்பரிய கனைகழலோன்— ஷை
உவலை † ச்சமயங்க ளொவ்வாத சாத்திரமாஞ்
சவலைக்கடலுளனாய்க் கிடந்துதடுமாறும்— ஷை
வான்கெட்டு மாருத மாய்ந்தழனீர் மண்கெடினுந்
தான்கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்கு ஷை
தம்பெருமை தானறியாத் தன்மைகாண்சாழலோ— ஷை
பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதுந் திருவாயான் மறைபோலுங் காணேடீ— திருச்சாழல்.
தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பாலுகந்தான் பெரும்பித்தன் காணேடீ— ஷை
திருந்தவருக் குலகியற்கை தெரியாகாண் சாழாலோ— ஷை
தாயிற் பெரிதுந் தயாவுடைய தம்பெருமான்... திருப்பூவல்லி.
கன்னு ருரித்தென்னை யாண்டுகொண்டான் கழலிணைகள்— ஷை
வளைந்தது வில்லு விளைந்தது பூசல்— திருவுந்தியார்.

சாலிவாடி

---

# THE TRUE HISTORY OF CASTES.
## சாதிவரலாற் றுண்மை.

---

ஆண்பெண் என்னும் இருசாதியொழிய இயற்கை யமைப்பில் வேறு சாதியில்லை என்பது வெளிப்படை. ஔவை யிட்டார்பெரியர் இடாதார் இழிகுலத்தர் என்ற இருவகைசாதியே யுளவென்பர். சாரலஸ் லாம்பு என்பவரும் [கடன்கொண்டார் கொடுத்தார் என்றே சாதியை வகுத்தனர். பூர்வ தமிழ்நாட்டில் எண்வகுப்பினர் இருந்தனரென்று விளங்குகின்றது. கலித்தொகை சிந்தாமணியில் கூறியபடி, அறிவர், உழவர், ஆயர், வேடர், கண்ணாளர், படையாட்சியர், வலையர், புலையர், இவரே எண்மராவர். அறிவர் திரிகாலத்தையும் அறிவர். இவர் நகரத்துக்கப் புறம் வசித்தனர். விசேடகாலங்களில்

* மூதேவி. † பொய்.

இத்துறவிகள் நகருட் புகுந்து கிரியைகள் செய்தனர். நாட்டில் வசித்தோரில் தலைவராவர் உழவர். இவர் இருவகுப்பினர். வெள்ளத்தைத் தடுத்து அதனைக் கழனிக்கு உபயோகப்படுத்தியவர் வெள்ளாளர். கார்மேகத்தை எதிர்பார்த்து வேளாண்மை செய்தவர் காராளர். இவர்களே பூபாலர். காட்டு மிருகங்களை வேட்டையாடுவர் வேடர். கால்நடைகளைப் பாதுகாத்து உழவுத் தொழிலுக்கு உபகரித்தோர் ஆயர். கொல்லன், தச்சன், கன்னான், தட்டான், ஆதிய அறுவகைக் கைத்தொழிலாளரும் கண்ணுள ராவர், ஊர்காவல்செய்து பகைவரைப் புறத்தோட்டும் படையினரே படையாட்சியர். வலைசெய்து மீன்களை வலைப்படுத்துவோர் வலையர். இழிதொழில்செய்குநர் புலையர். இவ்வெண்வகையாரும் தொழிற் பேதத்தால் வித்தியாசப்பட்டனரே யன்றி வேறுவழியில் உயர்ந்தவரும் தாழ்ந்தவரும் ஆயினரல்லர். கல்வி ஞானங்களில் முதிர்ந்தோர் அறிவரானர். கிருஷித்தொழிலில் கருத்துக்கொண்டவர் உழவரானர். இங்ஙனமே கல்லாதுகைவேலைசெய்து உய்ந்தனர் பலவகையார். இவர்களுக்குள் சாதிவித்தியாசங் கிடையாது. கபிலரகவலும் ஜென்மத்தாலன்றிக் கருமத்தால் வந்ததே சாதியென்கும்.

"பார்ப்பன மாந்தர்காள்
    டகர்வ்து கேண்மின்...
நால்வகைச் சாதியிந்
    நாட்டினீர் நாட்டினீர்
மேல்வகை கீழ்வகை
    விளங்குவ தொழுக்கால்."
"ஆணும் பெண்ணு
    மல்லதை யுணர்ந்து
பேணி யுரைப்பது
    பிழையெனப் படாது
சிறப்புஞ் சீலமு மல்லது
    பிறப்பு நலந்தருமோ
        பேதையீரே"

வள்ளுவர் வாசுகியை மணந்தனர். வாசுகிவெள்ளாட்டி, வள்ளுவர்பள்பறையா யிருத்தல் வேண்டும். இவரைக் கல்வி சிறக்கச் செய்தது. பக்தி விசேடத்தால் பெருமை பெற்றுப் பூசிக்கப் படுபவர் நந்தன் சாம்பனர். நந்தியில்லாக் கோவிலில்லை. நாயன்மார்களி லனேகர் பலவகுப்பினர். பிராமணரான சுந்தரர் பரவையர் சங்கிலியரென்ற இழிகுலப் பெண்களை மணந்தனர். வெள்ளாளராகிய அப்பர் உயர்குலப் பிராமணராகிய அப்பூதி நாயனரின் வேண்டு கோளுக்கிணங்கி அவருடனும் அவர்மனைவி பிள்ளைகளுடனும் கூடவிருந்து விருந்தருந்தினர். அறுநூற்றாண்டுகட்கு முன்னர்

சைவ சித்தாந்தத் தலைவராயிருந்த மெய்கண்ட தேவரென்னும் வெள்ளாளரடிபணிந்து சாத்திரங் கற்றனர் அருணந்தி சிவாசாரியரென்ற பிராமணோத்தமர். அவர்வழியிற் றோன்றிய மறைஞான சம்பந்தரிடங் கற்றவர் உமாபதி சிவாசாரியர். இவர் குருவின் எச்சிலையுமுண்டு வந்தனர் என்பது பழங்கதை. இவ்வுதாரணங்களால் பல வகுப்பினரும் தம்முள் வித்தியாசமன்னியில் உண்டு மணந்து வந்தனரென்பது வெளியாகின்றது. முற்கூறியபடி மேல்கீழ் என்பவை கல்வி, பக்தி, இவற்றின் மிகுதியாலும் குறைவாலும் ஏற்பட்டன.

"சேற்றிற் பிறந்த"
செங்கழுநீர் போலப்
பிரமற்குக் கூத்திவயிற்றிற்
பிறந்த வசிட்டரும்
வசிட்டர்க்குச்சண்டாளி
வயிற்றிற் பிறந்த சத்தியரும்
சத்தியர்க்குப் புலைச்சிதோள்
சேர்ந்து பிறந்த பராசரரும்
பராசரருக்கு மீன்வாணிச்சி
வயிற்றிற்பிறந்த வியாசரும்
வேதங்களோதி
மேன்மைபெற்று
மாதவராகி
வயங்கினரன்றோ"

தற்காலத்தில் வழங்கிவரும் சாதிகள பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரரென்னும் நான்கே. இவர்கள் நான்குவருணத்தவரெனப் படுவர். வருணம் என்றால் நிறம். இது அகம்புறமென இருவகைப்படும். அகவருணம் கல்வி, ஞானச்சிறப்பு. புறவருணம் வெண்மை கருமையாதிய நிறம். அகத்திலிருந்து தியானஞ்செய்வோர் நன்னிற முடையார். வெளியேபோய் வெய்யிலிலும் மழை - னிகளிலும் அடிபட்டவர் நிறங்குன்றிக் கருமை எய்தினர். புத்தியைப் பண்படுத்தாமல் புயத்தைப் பண்படுத்தினவர் க்ஷத்திரிய, வைசிய, சூத்திரரே. இவர்கள் அயலூரின்மேல் படையெடுத்துப் பிடித்தும் அயலூரில் வாணிபஞ்செய்தும், தம்மூரிலும் பிறவூரிலும் கிருஷிமுதலான கைத்தொழில் செய்தும் வாழ்ந்தனராதலின் இவர்கள் நிறத்தில் சிறந்து விளங்கினரல்லர். அறிவு, தொழில்பற்றியே இந்நான்கு வருணத்தாரும் பிரம்மாவின் பற்பல பாகங்களினின்று வுற்பத்தியாயினர் என்றனர். இந்நான்கு வருணங்களும் புதுக்குடிவந்த வாரியர் வகுத்தனவே. தமிழருக்கு இவை யுடன்பாடாகா. முற்காலத்திலேயே தமிழ்நாட்டிலுள்ள எண் வகுப்

பாரையும் ஆரியர் தாமியற்றிய நான்கு வருணங்களுள் தமக்குத் தோன்றியவாறு அடக்கினர். தொல்காப்பியத்தில் அறிவர்முதலிய சிலவகுப்பினர் பெயரைக் காணலாம். ஆனால் மரபுமுறையில் இவர் பெயர்கள் காண்கில். நான்கு வருணத்தார்மட்டுமே ஜொலிக்கின்றனர்.

முதல் முதலில் ஆரியர்வகுத்த நான்கு வருணத்தாரும் கூடியவண்ணம் சாதி வித்தியாசம் பாராமல் வுண்டுமணந்து களித்தனர். பார்ப்பாருடைய நிலை அதிகேவலமா யிருந்தது. முன்காலத்தில் பார்ப்பார், அந்தணர்என்ற பெயர்கள் அறிவிலுங் குணத்திலுஞ் சிறந்தோருக்கே வழங்கிவந்தன. பின்னர் அவை பிராமணருக்கு அமைந்தன. "அந்தணரென்போர் அறவோர் எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகலான்" என்றார் வள்ளுவரும். அன்றியும் பார்ப்பாரைப் பற்றிய பழமொழியொன்று உலாவுகின்றது. "பார்ப்பானுக்கு மூப்பான் பறையன், கேட்பாரின்றிக் கீழ்ச்சாதியானானே." பள்பறைமட்டுமே பிராமணக் குருக்களைவைத்துக் கொள்ள இணங்கிலர். கற்றறிந்த வள்ளுவரைத் தங்குருக்களாய்க் கொண்டனர். பிராமணருக்குத் தென்னிந்தியாவில் அதிகாரம் கிடைத்தது சித்தியர் இரஜபுத்திரராகத் தோன்றிய காலந்தொட்டே. இரஜ புத்திரருக்குத் துணைவராய்த் தூதுசென்று பன்னாடுகளைப் பிடிக்கக் காரண பூதரா யிருந்தனர் பிராமணராதலால், அவர்கட்கு இராஜாங்கத்தில் உயர்ந்த வுத்தியோகங்கள் கிடைத்தன. பின்னர் இராஜமந்திரிகளாய்த் தங்கள் பாடையாகிய சமஸ்கிருதத்தை மேன்மைப்படுத்தினர். ஆரியர் செழித்தகாலத்தில் தமிழ்வேந்தர் வலிகுன்றினர். பிராமணர் தாம் தெய்வத்தன்மை யுடையாரென்றும் மற்றவர் இழிஞரென்றும் கருவங்கொண்டனர். பிறவகுப்பினரைத் தொட்டாலும் தீட்டுண்டாம் என்றனர். இத்தகைய காருண்யக்குறை இக்காலத்ததென்பது முற்கூறிய திருஷ்டாந்தங்களால் விளங்கியிருக்கும்.

தற்காலத்தில் இச்சாதிவர லாறறியாமல் வெள்ளாளர் வைசியரோவன்றோவென்ற வாதப்போரிட்டு வீண்காலங் கழிக்கின்றனர். தொன்மையறியா வெள்ளாளர் தாங்கள் வைசியரென்றும், வைசியர் பூவைசியர் கோவைசியரென்றும், தாங்கள் முந்தின வகுப்பினரென்றும் பெருமை பாராட்டுகின்றனர். அதையாக்ஷேபித்து வெள்ளாளர் சூத்திரர் என்பர் ஏனையோர். தங்களுடைய பூர்வோத்திரத்தை முற்றிலு மறக்கவடித்த வாரியர் பெருமையேபெருமை!! சைனராக்கிய திவாகர நிகண்டுகளில் வெள்ளாளர் வைசியரென்பதும் ஆறுமுகநாவல ரவர்கள் தாம் பதிப்பித்த நிகண்டு முதற்பதிப்பில் அதை ஒத்துக்கொண்டு உள்ளபடியே அச்சியற்றியும் இரண்டாம் பதிப்பில் வெள்ளாளர் சூத்திரரென்று கொள்ளும் வண்ணம் சூத்திரங்களைத் திரித்தும் வீண் வாதமுண்டு பண்ணினரென்பதும் இரண்டு பதிப்புகளையும் பக்கலில்வைத்துப் பார்ப்போருக்கு வெள்ளிடைமலைபோல் விளங்கும். திருவிளையாடலில்

வெள்ளாளர் நான்காம் வருணத்தாரென்ற கூற்றுத் தவறேயாம். எங்ஙன மென்னில் அதன் முதனூலாகிய சமஸ்கிருதநூலில் நாலிலோரு வருணத் தாரைச் சேர்ந்தார் வெள்ளாளரென்றே காணப்படும். எப்படி இருந்தாலும் சரி. இந்த நான்குவருணமும் நமக்குப்பொருந்திய தன்றென்று முன்னரே காண்பித்துளேன். ஆதலால் நண்பர்கள் ஆரியர் தந்திரமாயிழைத்திட்ட விலங்குகளைத் தறிக்க முயலாமல் என் விலங்கு பொன்னாலாக்கப்பட்டது உம்விலங்கு இரும்பாலிழைக்கப்பட்ட தென்று குஞ்சிபிடித்துக் கூக்குரல் போடுதல் ஆக்கத்திற கழிவாம்.

இதுநிற்க, நம்முடைய வாலயங்களின் பூஜா விஷயத்திலும் ஆரியர்தலை யிட்டு சைவக்குருக்களை வெளியாக்கினர். சிவாலயங்களின் பட்டர்கள் ஆதியில் சைவக்குருக்களே. பிராமணர் மெள்ளமெள்ள கோயிலிற் புகுந்தனர். காசுக்கு வேதமோதத் தலைப்பட்டுப் பின் தமிழச்குருக்களின் தொழிலை யபகரித்தனர் "கறையான் புற்றெடுக்கப் பாம்புகுடிகொண்டது' என்றமுதுமொழிக்குப் பிராமணர் இலக்காயினர். அன்றியும், மேற்றிசை ஆரியர்களென்ற நாமங் கொண்டு நமது தேசத்தை யாண்டுவரும் ஐரோப்பியர் காலத்திலும் பிராமணர். படிப்பிற்சிறந்து உன்னத பதவிகளிலமைந்துளர், ஐரோப்பியர் காருண்ணியமுள்ள வராதலின் இத்தேசத்திலுள்ள மற்றைய சாதியாரின் பூர்வசரித்திரத்தை ஆராய்ச்சிசெய்ய வாரம்பித்தனர். அதனால் சூத்திரரென்று அழைக்கப்படும் கீழ்ச்சாதியார் பிராமணர்வன்கண்மையால் கடையாயின ரென்றறிந்து அன்னாருக்குக் கைகொடுத் துதவினர். தற்காலத்தில் மேற்றிசைப் படிப்புக்களில் மிகுந்ததேர்ச்சி யுற்றுவருபவர் பிராமணருக்குப் பின் கிறிஸ்தவப்பறையரே. இனியோன்றிரண்டு தலைமுறைகளில் பிராமணரையும் வெல்லுவர் அன்னாரென்பது உறுதி. இராஜருடைய உதவியிருப்போர் எவரா னாலும் முன்னுக்கு வருவர் என்பதில் ஐயமில்லை. சாதியின் சாத்திரவாராய்ச்சியில்லா மேற்றிசை யதிகாரிகளை மயக்கிப் பிராமணரல்லாத ஏனையோரனைவரும் சூத்திரரென்ற ஒரு வகுப்பினர்போன்று கொள்ளச்செய்தனர் பிராமணத்தலைமையுத்தியோகஸ்தர். ஆங்கிலங்கற்ற வனேக பிராமணருக்குள்ளேயே சாதிவித்தியாசம் மிகுதியாகப் பாராட்டப்பட்டு வருகின்றது. இதையொழிக்கக் கருதியே பிரமஞானசமையும் ஆசாரசீர்திருத்தச்சபையும் ஏற்பட்டன. காலாவதியில் இவற்றின்பயன் வெளியாகும். சாதி என்பது எடுபட்டு முன்போல கல்வியொழுக்கச் சிறப்பே ஒருவரை யுயர்குலத்தினராக்கும். இது விரைந்து வந்துறுமாறு ஈசனடிபணிகின்ற பலருளொருவனன அடியேன்.

வேதநாயகம்.

# GOVINDA LAKSHMI AMMAN.
# கோவிந்த லட்சுமி யம்மன்.

## விருத்தம்.

[இதனை யாக்கியோர் கி. பி. 1812-ம்ஹூ இருபத்திரண்டாம் வயதிற் சிவபத மடைந்தனர். இவர் சிறுபிராயத்திலேயே திருமாமலையில் இலக்கணவிலக்கியம் பயின்று அருமையான பா யாக்குந் திறம்பெற்றனர். பின்வரும்விருத்தந்தவிர செல்வி யம்மன்பேரில் விருத்தமுந் தாலாட்டும், முப்பிடாரியம்மன்பேரில் விருத்தமுஞ் செய்தனர்.]

மாகனக மேருவரை மீதளவில் தீபமென
வாழுமொளி மணி மகுடமும்
வச்சிரச் சுட்டியுஞ் சித்திரப் பொட்டிட்ட
வான்பிறைக் கோட்டு நுதலுங்
காகனக மாகளிறே டெண்டிசை நடுங்கமால்
காட்டுவிற் போற் புருவமுங்
கருணையங் கடலெனத் தமியனேற் கருள்தரக்
காருண்ய மான விழியுந்
தூகனக மேசொரிதல் போலக மலர்ந்தருள
சுரந்தளித் திடு வதனமுந்
துகிலணிகள் யாவுமுடை யாயுனது புதுமையைச்
சொல்லுதற் கெளி தாகுமோ
கோகனக மாதுவளர் தெப்பக் குள*த்திலுறை
கோவிந்த மா லட்சுமி
கோலா கலிகௌரி மாகாளி யூரவர்கள்
கொண்டாட வீன்ற வுமையே (க)

தீதற்ற நவரத்ன சிம்மா சனத்திலுறை
தேவியே மக மாகியே
செல்வியே யம்மையே தேவர்தொழும் வல்லியே
சிவஞான தீப வொளியே
வேதத் தனிப்பொருளி னுட்பொரு ளெனப்பெரியர்
வேண்டுகொண் டாடு மயிலே
விண்புவிக் கரசியே யென்னுளக் கமலத்தில்
வீற்றிருந் தருள் மாரியே

---

* திருநெல்வேலித்தாலூகாமுன்னீர்ப் பள்ளங்கிராமத்தின் வடபகுதி.

காதற் றனிப்பெருங் கருணையே யெளியன்விழி
களிகூர நின்ற வனமே*
கண்ணொடு மனத்தினுக் கெட்டாதவின் னியல்பு
சழறுதற் கெளி தாகுமோ
கோதற்ற செல்வனிறை தெப்பக் குளத்திலுறை
கோவிந்த பா லட்சுமி
குலதேவ தாய்குமரி மாகாளி யூரவர்கள்
கொண்டாட நின்ற வுமையே (உ)

மேவுதிரி புரமுமெரி யாயெழநொ டிப்பளவில்
மென்னகை முகிழ்த்த வடிவே
வேதியர்க ளோதியுணர் வேதமுறை நூலதனை
விரித்துத் தெரித்த விளைவே
பரவுவொளி விரிகமல வேடொ†ரீ ராறிற்
பரிந்துலகில் நின்ற வொளியே
பரிபூர ணியெனது பாவினும் நாவினும்
பதிந்தரசு செய்த வடிவே
தூவுமலர் மாரியுயர் தேவர்மொழி தாவுலகு
சோதியே திரு பாலியே
துரந்தரி நிரந்தரி புரந்தரி நின்புதுமை
சொல்லுதற் கெளி தாகுமோ
கோவுலகில் ராஜருறை தெப்பக் குளத்திலுறை
கோவிந்த பா லட்சுமி
கோமதி வைணவி மாகாளி யூரவர்கள்
கொண்டாட நின்ற வுமையே (௩)

அண்டமோ ராயிரத் தெட்டினு நடந்துவிளை
யாடிவரு சூரர் கிளையை
யடியோ டறுத்தவர்கள் குடர்மாலை சூடவறு
முகவனுக் கயில்*கொடுத்தாய்
விண்டல நடுங்கநெடு வேதண்ட † முஞ்சுழல
வெகுவேக முடனே திசை
வேழமெட் டுந்திரிய வெயிறுகொண் டுழுதுவிளை
யாடியெழு பார் பெயர்த்தாய்
பிண்டமு நிறைந்துபகி ரண்டமு நிறைந்துபிரி
யாமலடி யேன்மு னின்று

---

* அன்னம். † சிலை. *கைவேல் †கைலை

பேசுவாய் கேட்டதுந் தருகுவாய் நின்புதுமை
பேசுதற் கெளி தாகுமோ
கொண்டல்*தவழ் தண்டலைசூழ் † தெப்பக் குளத்திலுறை
கோவிந்த மாலட்சுமி
குண்டரிகோடரி மாகாளி யூரவர்கள்
கொண்டாட நின்ற வுமையே. (ச)

அமரரரி யயனுருத்திரர் முனிவர் கணநாத
ராகண்டலன்§முதலி னோர்
அடிபணிந் தனதுகுற் றேவல்பணி யென்றிரந்
தவர்களிரு பாலு நின்று
நமநமோ சிவசிவா ஹரிஹரி பகவதி
நாராயணீ திரி சூலி
நாயகி யேகாச் சரேஸ்வரி குணகுணி
நவகோண வரியா சனி
யமர்பதி ராஜரா ஜேஸ்வரி மனோன்மணி
யென்றுதொழ வீற் றிருந்த
யேழையே னின்னிடம் பிரியா திருந்தநின்
னியல்பெனுற் சொல லாகுமோ
குமரசின் மேருவளர் தெப்பக் குளத்திலுறை
கோவிந்த மா லட்சுமி
குணோததி பகவதி மாகாளி யூரவர்கள்
கொண்டாட நின்ற வுமையே (ரு)

மு. கவிராஜ சுப்பிரமணிய பிள்ளை.

---

## FRIENDSHIP.

## நட்புறல்.

---

புத்தக மத்த பூடணமென்போரும் நட்டார் விட்டாரின் மேலென்பர். அவாவற்ற மனிதர் சார்த்திசைப்பிறை. பரி, பட்சி, பணம், பாரித்தமதிப்பு இவற்றை விரும்புவர் மனிதர், என்றனர் சாக்ரேட்டீஸ். ஆனால் அவர் பெரிதாகக்கொண்டது நண்பர் தம்மையே. தங்களுக்குண்டான பலவற்றையுங் கணக்கிடுபவர் நண்பரைக்குறித்துக் கவனிக்கின்றிலர். மற்றப் பொருள்களைப்பற்றி மனிதர் அபிப்பிராயம் வேறுபடினும் நட்பைப்பற்றி எல்லோரும் ஒரே கருத்தினராவர். ஏனெனில் அன்புடையார் ஆயுளுக்கு அருமையும்

*மேகம். † சோலை. §இந்திரன்.

அழகும் வாய்ந்த ஓடைதம் போலுநர். சுணங்கன், குதிரை இவற்றை வாங்கு முன்னர் அவற்றின் குணம் இலக்ஷணம் இவற்றைக்கவனித்தல் வழக்கமாயிருக்க, நட்புக்குரியரைத் தெரிவதில் நாம் அத்துணை கவனஞ்செலுத்துவதில்லை. நன்மைதீமை இரண்டிற்குங் காரணர் நட்புடையாளரன்றோ ?

"வேண்டா வமயங்களில் வருவோரனைவரும் வாதனை செய்வோராவர்" என்ற காலையுணக் குழாத்தலைவர் கூற்று வுண்மையேயாம். "தனியிருக்கக் கல்லாத தாழறிவாளர்க்குத் தாமே சிறையிடம். பக்திபக்தியாய் மனத்தில் வந்தடையும் கருத்துடையாரும் தம்மெண்ணங்களை விட்டு மனிதர் முகநோக்க அவாவுறுவர். ஏறக்குறைய "எல்லோரும் சந்தித்தற்பொருட்டு இறங்குவர்" என்பது எமர்சன் வாக்கியம். "நீக்குப் போக்கில்லாக் கூட்டுறவில்லை, அஃதன்றி எத்துணை யழகுவாய்ந்த இயல்பினரும் ஒருவரையொருவர் அணுகுங்கால் தம்மணங் குன்றுகின்றனர்." இஃது அனுபவ வுடன்பாடன்றென்பர் சிலர். ஏனெனில் நட்பொளியால் இயற்கைவனப்புமிருக்க மலர்விரிந்து நிறம்பெறும்.

சிலர் பகையுண்டுபண்ணுவதில் பேரானந்தமடைகின்றனர். அவர் பகை மூட்டிவிடுவதில் எடுக்கும்முயற்சிக் களவில்லை. "அனேகர் கையைப் பிடித்துக் குலுக்காதே" என்றனர் பித்தாகரஸ் என்ற தத்துவஞானி. தெரிந்தெடுத்த நண்பர் ஆயிரவரெனினும் ஒருவரையும் விட்டொழிய எவருமிணங்கார். பகைவனொருவனுளனேல் அவனை யெங்கணும் பார்க்கலாம். சிலர் அவதூறு பேசுவதிலும் வேறுசிலர் ரஞ்சிதமாய் சம்பாஷித்தலிலும், மற்றொரு சாரார் வீண்வாதாடுவதிலும் காலத்தைக் கழிக்கின்றனர். சிலர்புத்திநுட்பமான வினாக்களைப்போட்டு அறிவு பரப்புவர். சிலர் தம்முருக்கமான வார்த்தைகளால் அன்பு பெருக்குவர். இவ்விரண்டுஞ் செய்யாதவர் சகவாசம் அவமாம். அவர்களுடன் முகமறியாதிருத்தல் நமக்கு நன்மையாம்.

தக்கதோழர்களையும் நண்பர்களையும் ஆய்ந்துகொள்ளல் வாழ்நாட்குத் தூய்மை யின்பமளிக்கும். ஆராயாத நட்பு நம்மைத்தாழ்த்தும், ஆய்ந்தநட்பு நம்மையுயர்த்தும். ஆனால் இதவிஷயத்தில் அனேகர் அத்துணை கவனியாமல் நடந்தபடி நடக்கட்டும் என்றுவிடுகின்றனர். நம்மிடம்வரும் எவரையுமதித்துக் கனப்படுத்துதல் நமதுகடமை. ஆத்மநண்பரைத் தெரிதல் எளிதன்று. சிலர் பக்கத்திலுள்ளாரையும், தம்முடன் வேலையிலமர்ந்திருப்பவரையும், ஒரே வண்டியில் பிரயாணஞ் செய்பவரையும் நண்பர்களாகக் கொள்கின்றனர். இதனினும் பெருந்தவறு வேறிலது. இவர்களனைவரும் போலி நண்பராம்.

எவருடனும் நட்புக்கொள்ளல் வேறுவிஷயம். எவரையேனும் நண்பராய்க்கொள்ளுபவர் எல்லோருக்கும் நன்மனமுடையராவர். நல்லசுபாவமேயில்லாதவரைக் காண்டலரிது. "உலகத்தவர் நன்றிகெட்டவர், சுயநயங்க

ருதுபவர், ஆனால் இவ்விருவகையினரையும் நான் கண்டிலேன்'' என்றனர் தஞ்சரித்திரமெழுதிய நாசிமீத் என்பவர். எமர்சன் "நாம் உலகில் தனியாயுலாவுகின்றனம்" என்று சொற்றனர்.

"உலகில் நட்புக்கிடையாது. அது தம்போலியர்கட் சிறிதுமிலது." இது பேகனுர் சிற்றுரை. மற்ருேரிடத்தில் இவரே, "அந்தரங்க இனேகமிலாமை வெறுக்கத்தக்கதே. நண்பரில்லாவுலகு நடுக்காடாம்" என்று கூறியிருக்கின்றனர். நண்பரால் மனவிருள்மாயும், மனத்தெளிவுண்டாம், கவலேயற்று அன்புவளரும், அறிவு ஒழுங்குபடும். ஜனத்திரள் நண்பராகார், வரிசைவரிசையாகத் தோன்றுபவரெலாம் சித்திரத் தொகுதிகளாவர். அன்பில்லாத வார்த்தை மணியோசைக்கு நிகராம்.

"அந்நியராயிருப்பினும் நன்ருய் சம்பாஷித்தோம்," என்ற.கலேவல்லான் ஜான்சனுடைய மொழி கருதத்தக்கதே.

நாம் நண்பருடன் பிறர் சீலங்களேப்பேசலாம், முயற்சியை சிலாகிக்கலாம், அடக்கத்தை அருமையாகப் பாராட்டலாம். ஒருவர் மனமித்தன்மைத் தென்று காணுதல் அரிது.

"நட்டல் எளிது, நட்டபின் அதைக்காப்பாற்றல் வலிதாம். நண்பர் ஒருவர் தம்மைப்பற்றிப் பிறர் பேசுமனைத்தையும் அறிவரேல், உலகில் நாலவர் நண்பராயிருத்தலியலாது," என்றனர் பாஸ்கல் பெருமான். நட்புக்கொள்விரேல் நட்பைக்காவுமின். அடிக்கடி பாராதவர் நட்பு முள்ளும் புதருமிகுந்த நடைபாதை போன்ரும். ஓரிரவுதங்கவடித்த கூடாரமன்று உட்பாசம்.

கண்கெடும்வரை கண்ணின் சிறப்புத்தெரியாது. அதுபோன்று நட்பிழக்கும்வரை நட்பின்பெருமை விளங்காதாம்.

சாதலால் நட்புநாரருது. கண்களிற் புலப்படாது போயினும் நண்பர் நம்முடனேயிருப்பர். தரித்திரமிகினு மவர் தனவந்தரே. வலிகுறைந்தாரேனும் சுகமிகுந்தவரே. இறந்தாரேனும் உயிருள்ளாரே. "துஞ்சிய சிப்பியோ என்றும் நண்பர் எனக்கு" என்றனர் சிஸரோ.

நண்பரின் குணுதிசயங்கட்காக நட்டலே தகுதி. பொருளே வெளவி நட்டல் புன்மை. யாண்டகுண நட்பினர் மாண்டாலும் மறக்கற்பாலரல்லர்.

ஈஸ்வர ஐயர்.

# CHINNATHAMBI.
# சின்னத்தம்பி.

## அதிகாரம் 1.
### பாலன் அரங்கேற்றம்.

மலாடும் வளர்பாண்டியும் வழங்குபுனனாடும்
நிலாவுதிறை யாகவிதி விச்சமும் வழங்கி
விலாழி மத குஞ்சரமும் வெய்யபொருண் மற்றும்
குலாவு சிறப்பெய்திபது கொங்குவளநாடு.—கச்சியப்ப முனிவர்.

“கொங்குவள” நாட்டிலே பலபதிகளிலே மிகச்சிறந்தது காளமா நகர். அதன் தென்பாகத்திலே மாரியம்மன் கொலு வீற்றிருந்தருளும் திருக்கோயில் இலங்கும். அது வேப்பிலை மயமாய் பச்சைப் பசந்திருப்பது பரமேஸ்வரன் இடப்பாகத் தொளிரும் அம்பிகையார் திருவவதார மென்பதை நன்கு விளக்கிக் காட்டுகின்றது. மாரியம்மன் பேரருளை முன்னிட்டு இந்நகரத்தார்கள் துட்ட வியாதிகள் அணுகாது சுகமே வாழ்வார்கள். மாரியம்மனுக்குக் காணிக்கை செலுத்து வோரும், தவழ்பிள்ளை, ஏந்துபிள்ளை, காளி, கூளி, மாடு, குதிரை இவைகளின் கன்று, குட்டி உருவாரங்களைக் கொணர்ந்து வைப்போரும் இடைவிடாது வருவார்கள். பெரியம்மை, சிறியம்மைகளால் துன்புற்றுக் குணமானவர்கள் ஆயிரங்கட்பானை யெடுத்து வைப்பார்கள். இவைகள் எல்லாம் திருக்கோயில் முகப்பிற்கு அணியாகும். மாரியம்மன் கோயில் மத்தியில் அத்தாணி மண்டபம் ஒன்று விளங்கும். அம்மண்டபம் அவ்வூர்ப் பெரியதனக்காரக் கவுண்டன் இருப்பிடமாய் அமைந்தது. சக்கிரவர்த்திகளுக்குச் சிம்மாதன மெப்படியோ, கிரீடாதிபதிகளுக்குக் கிரீடமெப்படியோ, மதுரையிற்கூடித் தமிழ்ப்பயிர் வளர்த்த புலவர் நாற்பத் தொன்பதின்மர்களுக்குச் சங்கப் பலகையெப்படியோ அப்படியே இவ்வூர்க்கவுண்டனுக்கு இம்மண்டபம் சிறப்புடையது, பெரும் பயன் அளித்து வருவது. அதன் ஏழ்நிலை மேடையேறி எழில் பெறவீற்றிருந்து ஊரார் வியவகாரவிசாரணை செய்து நீதி நன்கறிந்து இரு திறத்தாரும் ஒப்பத் தீர்மானிப்பான். கருடன் பிடரிமீதிலமர்ந்து கரிய திருமேனிப்பரந்தாமன் அடியவர்களுக்கருள் கூரும் அன்னோன் நாபிபங்கமலம் வீற்றுச் சதுர்முகப்பிரமன் திரு நான்குமறை அருளும். வெண்ணிற வாரணமேறி ஆயிரங்கண்படைத்த அயிராணிகேள்வன் தேவர்களைக்காக்கும். காளமா புரிப் பெரியதனக்காரக் கவுண்டன் மாரியம்மன் திரு முன்றிலில் விளங்கும் அத்தாணிமண்டப ஏழ்நிலை மேடையேறி வீற்றிருந்து நீதி கூறுவான், வழக்குத் தீர்ப்பான். இற்றைக்கு இருநூறு வருடங்களுக்கு முன்னே கொங்கு

நாடாதிய எண்ணிலா நாடுகளை மைசூர்க்கருத்தர் ஆளுங்காலத்திலே வேளாளர் குலத்திலே அக்குலத்தோர் அருந்தவப்பயனாய் மசக் கவுண்டன் யென்னும் பிள்ளைத்திருநாமம் படைத்தவன் ஊரிற் பெரியதனம் வகித்து இம் மண்டபத் திலங்கும் எழ்சீலை மேடையேறி, யெந்த வேளையிலும் நொந்தடைந்தவர் துயர்கேட்டு அவர்களுக்கு இடர் இழைப்பவன் தன் சொந்த மைந்தனே யெனினும் சிக்ஷைபுரிய நடுங்காமனத்தவனாகிக் குடிகளின் சுக நலத்தையே கருதி வேறொரு சிந்தனையும் இல்லாதவனாய்த் தீமொழிகள் கனவிலுங்கருதாது தந்தை போலவும் தாய்போலவும் குடிகள் மீது அன்பு பாராட்டிக்காத்து வந்தான்.

இங்ஙனம் இருந்துழி ஓர் நாள் அருணோதயம் ஆயிற்று, பூந்தடாகங்களில் தாமரைகள் மலர்ந்தன. வேதியர்கள் அசமும் விரிந்தது. ஆரணம் ஓதுவதானார்கள். மங்கலகித வாத்திய முழக்கம் ஊரின் செல்வத்தையும் இன்பத்தையும் காட்டின. அவரவர்கள் சத்தமுது தொழில் மேற் சென்றார்கள். ஊர்ப் பெரியதனக்காரனும் அதிகாலையில் எழுந்து காலைக் கடன்முடித்து வெண்ணீறு முன்னெற்றியிலணிந்து சிவபெருமான் திருவடியகமீதிருத்தி அஞ்சலி செய்து வெள்ளாடை யுடுத்திக் களங்கமில்லா அகத்தவனாகிப் பரிவாரம்புடை சூழ, வேதியர் ஆசிகூற மூத்தோர் அகங்குளிர அடுத்தோர் போற்றிப் புகழத் தனது இல்லம் விட்டுக்கோயில் புக்கான். எழ்சீலை மேடையேறிக் "காண்டற் கெளியனாய்க் கடுஞ்சொல் இல்லானாய்" ஊரார்கள் குறைமுறைப்பாடுகளைக் குறித்து விசாரிக்க அமர்ந்தான். அக்காலை கணக்கில்லாக் குடிகள் கூம்பிய முகத்தோடு கூடினார்கள். குறைகளை யிரந்தார்கள்; முறைகளை மொழிந்தார்கள். அழுவோர் அழுதரற்றினார்கள். விழுவோர் விழுந்தலறினார்கள். அவரவர்களுக்கு ஒப்பமொழிந்து நீதியறிந்து இருதிறத்தார்களுக்கும் களிப்போங்கத் தீர்மானித்தான். அம்மன் கோயில் உட்பிரககரத்தில் குடிகள் திரண்டிருந்தனர். கோயிலுச்குள் வரவொண்ணாத ஜாதி சமயத்தார்களும், வழக்குத் தீர்க்கும் விந்தையைப்பார்ப்போர்களும், கேட்போர்களும், வெளியில் சந்தையிற் கூட்டம்போலக் கூடி நிறைந்தார்கள். நாழிகையோ பத்தாயிற்று. அருணன் உச்சியேற ஐந்து நாழிகைப் போழ்துண்டு. சவுண்டன் திறமையை வியப்பவரும், குணாதிசயங்களைக் கூறுகிறவர்களும், கொடைநடைகளை நவில்கிறவர்களும், காசமாநகர்க் குற்றவிறையோ இவனென்று துதிப்பாரும், நல்லியமனத்தானென்று இசைப்பவரும், நீடூழிவாழக் கடவுளை வேண்டுவோருமாய்க் கூடியவர்கள் குலாவினார்கள். இங்ஙனம் கூடியவர்கள் அறைந்து அதிசயிக்கும் சமயத்தில், இருப்புக்கட்டுப் பிடித்து நீண்ட சருங்கழியைக் கரத்திலேந்தித் தலையில் உருமால் கட்டி மாசுபடிந்த ஆடை முழந்தாளுக்கு மேல் அரைக்கசைத்துக் கணுக்கால் வரை புழுதி புரண்டவனாய்ப் பெருமூச்செறிந்து முன்னெற்றி வியர்த்து அங்கமுழுவதும் வியர்வை யரும்பி வடிந்து பூமியை நனை

க்க ஓடிவந்து தூரத்தில் நெடுக வீழ்ந்து தரையை முத்தமிட்டெழுந்து வாய்புதைத்து நின்று மனம் பதைக்க "என் ஆண்டவனே! கருத்தர் கொடுத்து விட்ட ஓலையிது" என்று கூறி நீட்டினன். கவுண்டர் புன்னகை கொண்டு அடுத்தோனை நோக்கி அதனை வாங்கப் பணித்தனன். அது சுருள் ஓலை. பிரித்துப் பார்த்தார்கள். அதில் கருத்தர் முகரும் கைச்சாத்தும் இருந்தன; கண்டார்கள். உள்ள பொருள் கண்டார்கள் இல்லை. அக்காலத்தில் அரசுரிமைக் கடிதங்கள் எல்லாம் தமிழ்ப் பாஷையில் எழுதப்படுவனவல்ல, சகல கடிதப் போக்கு வரத்துகளும் இந்துபிப் பாஷையில் தான். நஞ்செந்தமிழ் தெய்வீகம் பொருந்திய பாஷையாதலால் அரசுரிமைப் பாஷையாக மாறவில்லை. தெய்வமயமானவர்க்கு இகத்தாசை எதற்கு? சேர சோழ பாண்டியர்கள் தெய்வமயமானவர்களாதலால் அவர்கள் காலத்தில் அரசுரிமை கொண்டு மிருந்தது. இந்துபியில் ஓலையிருந்ததால் படிப்போரும் உரைப்போரும் அற்று அதிற் குறித்த செய்தி இலை மறை காய்போல் மறையக் கிடந்தது. அங்கிருந்தோரிடம் கவுண்டன் கொடுப்பித்தான், ஒவ்வொருவராய் ஏற்றனர். கண் பிசைந்து ஒருவன் பார்த்தான். மீசையை முறுக்கிவிட்டு மற்றொருவன் பார்த்தான். வேறொருவன் கோணைக் கட்டுக் கட்டிய உருண்டை உருமால் தலையை அசைத்து அசைத்துப் பார்த்தான். அவற்கடுத்தவன் பார்த்து முற்றும் தெரிந்தவன்போலக் கொஞ்சந்தான் தெரியவில்லை என்றான். அயலானொருவன் "இவனென்ன எழுதத்தெரியாது எழுதி இருக்கிறான்" என்று ஓலையைக் கெடுக்கப் பார்த்தான். மற்றொருவன் 'இதென்ன கஷ்டமா! இதோ பார் படித்துக்காட்டி உங்களுக்கெல்லாம் வெட்க மூட்டுகிறேன்' என்று ஓலையை எடுத்து விரித்து முகங் கூம்பினன். இவ்வாறு கூடியவர்களால் ஓலை படிக்க முடியாமற் போயிற்று. கவுண்டன் கண் சிவந்தது. துக்க மேலிட்டது. நமது சமஸ்தானத்தில் 'நீட்டோலை வாசிக்கத் தெரியாது நிற்கும் கணக்கர்களும் வாய்த்தார்களே' என்று வருந்தினன். கடவுளை நொந்தனன். இதற்குள் "கொடுங்கள் கொடுங்கள்" என்னும் நீரசப்தம் சிறிது தூரத்திற் பிறந்தது. இதென்ன அசரீரியோ என்று ஐய முற்றார்கள். ஒலி பிறந்த திடத்தைக் கருதும் போது இவ்வோலைப் பொருள் விளங்குவதாகும் என்று கவுண்டன் சிந்தித்தனன். நான்கு புறமும் உற்று நோக்கினன். சிறுத்த பையன், பதினாறாட்டைப் பிராயத்தான், பால் மணங்கமழும் வாயான், "வெள்ளைக் கலையுடுத்தி வெள்ளைப் பணி பூண்டு வெள்ளைக்கமலத்தில்" ஏடுங்கையுமாய் விளங்கும் கலாவாணி தாண்டவஞ் செய்யு முகத்தான, சிவபிரான் திருவடி விரிந்த மனத்தான், "தேன் கசிவுந்த" சொல்லான் ஒருவன் "கொடுங்கள். கொடுங்கள், நான் வாசிக்கிறேன்" என்று கூறி முன் வந்தவனைக் காவலாளர் "ஏண்டா கணக்கர் ஆதிய பெரியவர்கள் படிக்கப் பிணக்கமுற்றுக் கிடக்கிறார்கள். அதை நீயா படிக்கிறவன். சீ! முடவனுக் கென்னடா கொம்புத்தேன் மயக்கம்" என்று ஏள

னஞ்செய்து கைப்பற்றி இழுத்துத் தள்ளவும் அடங்காது மீறித் 'தொக்கடவை' ஏறி மண்டபமணுகு வதைக் கவுண்டன் கண்டு மேடை மீதேறப் பணித்தனன். அன்பு பூண்டனன்.

கவுண்டன் பிள்ளையைப்பார்த்து.—"பிள்ளாய், வாசிப்பது உண்மையோ?" என்றான்.

"வாசிப்பேன்" என்ற விடைக்குக் கவுண்டன் "ஓலை இந்துபி யாயிற்றே, நீ யறிவையோ?" என்றனன்.

"தமிழும் இந்துபியுந் தட்டறவோதுவேன்" என்றான்.

சொல்லியதைக் கவுண்டன் சருணாமிருதமாக் கேட்டு, தானே ஓலையை வாங்கிக் கொடுத்ததைப் பிள்ளை ஏற்றனன். வாசித்துப் பொருள் உரைத்தனன். ஆ! ஆ!! என்று அருகிலிருந்தோர் எல்லோரும் வியந்தார்கள். சமர்த்தன், அதிசமர்த்தன் என்று மெச்சினார்கள். நாயகனும் முன்னையிலும் பதின்மடங்கதிகமான விசுவாசம் பூண்டு கட்டி அணைத்து உச்சிமோந்து இச்சகம் பகர்ந்து அருகிருத்திக் கொண்டனன். அச்சபையில் சிறுவனும் கலாபீடமாய்க் கவினப் பெற்றனன். நாழிகை பதினைந்தாயிற்று. குழந்தையைக் கைப்பற்றிக்கொண்டு நாயகன் மேடையினின்றும் இழிந்து கூட்டங்கலைடப் பரிவாரத்தார் புடை சூழ இல்லம் போயினன். அச்சமய முதல் குழந்தையை நாயகன் அபிமான புத்திரனாகக் கொண்டு, சீரும் சிறப்பு மியற்றி வந்தான். போஜனத்திற்கு அண்டை வீட்டு அந்தணன் மனையில் ஏற்பாடு செய்தனன். குழந்தையின் கல்வித் திறமை, கவிபாடு நபம், உத்தமகுணம், மேம்பாடான நடத்தை, நிறைந்த அறிவு, இவற்றைச் சீர் தூக்கிப் பார்த்து அரியவனெனக்கண்டு கண்ணினுஞ் சிறந்தவனாகப் பாவித்துக் கவுண்டன் இமைப்பொழுதும் பிரியாது உரைதருவ தாயினன். பிள்ளையும் அவ்வாறே நாயகன் அன்பை அறிந்து அவனிடமே இருப்பதாகத் தீர்மானித்தான். இவ்வாறு இருவர் மனமும் ஒத்தது. சாளமா நகரைப் பிள்ளை தனது இருப்பிடமாகவும் நாயகனைத் தனது அன்னையும் பிதாவும் உற்ற சுற்றத்தார்களாகவும் கொண்டு வாழ்ந்தனன். காலைப்பொழுதில் நாயகனுடன் கூடி அம்மன்கோயில் அணுகி ஊரார் வழக்கின்பிணக்குத் தீர்த்தும், பகற்பொழுதில் சிந்தாமணி, சிலப்பதிகாரம், இராமாயணமாதிய காவியங்களின் தெள்ளுரைபார்த்தும், இரவுக்காலங்களில் திரள் திரளாகத் திரண்டு வரும் ஊரார்களுக்குத் திருவிளையாடல் பெரிய புராணம் ஓதியும், பாரத பாகவத புராணப்பிரசங்கஞ் செய்தும் தெய்வ பக்தி யூட்டி வந்தனன். இவ்வாறாக நாட்கள் விரைந்தன. மாதங்கள் தோன்றி மறைந்தன. கடைசியாக வருஷங்கள் கழிந்தன. இவைகள் எல்லாம் பிள்ளையின் வாழ்நாளை அளவெடுக்குங் கருவிகளாக ஏற்பட்டன. பிள்ளை மீது மடியா அன்பும் ஒழியா ஆர்வமும் ஊரார்களுக்குள் விளையவே,

நகரியெங்கும் அடுத்த நாடெங்கும் இளங்கவிஞர் என்றும் மதுரவாக்கியர் என்றும் அழைக்கப் பெற்றனர். நாயகன் பிள்ளையைப் பிள்ளையாக மதியாது. உருவிற் சிறுத்து வயதில் இளைத்து அறிவில் முதிர்ந்து விளங்குவதால் "சின்னத்தம்பி" யென்று அழைப்பதாயினன். இப்பெயராலே பிள்ளையை ஊராரெல்லாம் அறிந்தார்கள். இப்பிள்ளை நாட்டிற்கே சின்னத் தம்பியாயினன். இராமனுக்கு இளைத்ததால் இலட்சுமணன் இளைய பெருமாள் என்னும் பெயர் பெற்றனன். சுப்பிரமணியனும் முருகன் அல்லவோ! சின்னத் தம்பிக்கு வயது இருபதாயிற்று. காளைப்பருவ மணுகியது. சட்டமணுயினர். சமயதீக்ஷையாதிவை செய்யப் பெற்றனர். "காமனும் கண்டு சாமுறும்" வுருவமைந்தவர் பல்பூம் பொய்கைத்தாமரை போன்றும் பனிவானத் தெல்லார் கண்ணுமின்புறவூறும் மதி போன்றுங்-கொல்லுஞ் சிங்கக் குட்டியும் போன்றிவ்வுலகேத்த" ச்சென்றனர். சுகமே வாழ்ந்தனர். "•தீமைப் பானெறி பலவு நீங்கிப்பரிதியங் கடவுளென்னகோனெறி தழுவிக்" குணத்தொடும் நின்றனர்.

## அதிகாரம் 2.

### பிள்ளை மேம்பாடு.

நாமகள் நலத்தை யெல்லாம் நலமுற உண்டு, கீர்த்தியும் சீர்த்தியும் தழுவுறவுற்றுப் பூமகள் ஆர்வமீதூரப் புல்லியெடுக்க விரைந்துவந்தடையப் பிள்ளை தரைமீது குறைவிலாது வாழ்ந்து வந்தனர். தமிழ்க்கலை கற்கும் ஆசைமீறிய சிறுர்கள் பலர்க்குக் குருபீடமாய் அமர்ந்தனர். சிறப்பும் திறமும் மேம்பட்டன. இரண்டும் ஒன்ருய் ஓங்கின. ஒழுக்கமும் துலக்கமுற்று விளங்கியது. இவர் வசிக்கும் நகரும் அதைச்சூழ்ந்த நாடும் செழித்தன. அந்தணர் யாகப்புகை ஆகாயம் பரவியது. மாதம் மும்மாரி பொழிந்தது. இவர்நாடோ மைசூர் அரசர்களுக்குட் பட்டது. இக்காலத்தில் சிக்கதேவராய வுடையார் செங்கோல் செலுத்தினர். இவர் கொடுங்கோல் மன்னர் அல்லர். மனுநீதி தவருது கற்றுத் தேர்ந்து தெளிந்த மந்திரிபை அருகிலிருத்தி அரசர்க் கின்றியமையாச் சுற்றத்தார்களை நயந்து கலந்து கடவுளுக்குப் பயந்து நாடாண்டு வந்தனர். பயிர் விளைவோங்கியது. க்ஷேமம் பெருகியது. குடிகள் சுகமே வாழ்ந்தார்கள். மன்னன் முக மகிழ்ந்து அகம் பூரித்தான். நாட்டைப் பகுத்தான். அங்கங்குள்ளவர்களைத் தனது பிரதிநிதிகளாக்கினுன். அவரவர்கள் பால் பகுந்த பாகங்களை விட்டு வசூலித்துக் காலப்படி திறையனுப்பக் கட்டளையிட்டனன். இவர்களில் நாம் முந்திய அதிகாரத்தில் கூறிய கவுண்டனும் ஒருவன். அந்நாட்களில் புகையிலை என்னும் பிரமபத்திரம் செழித்து வளர்ந்தது. இது பயிரில் வெண்மை நிறம் பொருந்திப் பிரமனையும், வளர்ந்து வளப்பமுற்ற காலத்தில் கறுத்துத் திருமாலையும், இறுதிக் காலத்தில் செந்நிறமுற்று அரனையும் ஒத்தது. ஆதலால் அரசன் கருத்தைக் கவர்ந்

தது. கவரவே அதன் பயன் அடையக் கருதினன். கருதி அதற்குப் புதுத் தீர்வை விதிப்பதோடு அதைவசூலித்து அனுப்பப் பிரத்தியேக அதிகாரிகளை நியமனஞ் செய்வதற்காக ஆங்காங்கு ஓலை போக்கினன். கவுண்டனுக்கும் ஓலை வந்தது. ஓலையில் தக்க ஒரு சமர்த்தனைத்தேடிப் புகையிலைச் சுங்க வசூற் பொறுப்பை ஏற்பதற்காக அனுப்பும்படி கண்டிருக்க மசக்கவுண்டன் தம்பியை மைசூர் சமஸ்தானத்திற்குப் போக்கினன். சின்னத்தம்பி கவுண்டன் விடுத்த காவலாளர்களுடன் காளைமா நகரினின்றும் கட்டமுதோடு கோழி கூவும்போது புறப்பட்டு, வழியிலுள்ள மலையுங் காடுங் கடந்து, மேடும் பள்ளமும் தாண்டி, ஆறும் சோலையுமகன்று கடைசியாக "நீணிலம் வகுத்துநீர் நிவர்ந்தவர் திறிதரச்-சேணிலத்தியற்றிய சித்திரச் சுருங்கை சேர்-கோணிலத் துவெய்யவாங் கொடுஞ்சுரத் தடங்கிடங்கு" சூழ்ந்து ஆகாய முகட்டைக் கிழித்து உயர்ந்த மதிற்கோட்டையுடைய மைசூரைச்சேர்ந்து, வனங்கண்டு களித்து, நகரணி, படையணி, மனையணிவியந்து அரண்மனை அழகைக்கண்டு கண்விருந்தாக்கி, அடைந்தசெய்தியை அரையர்க்கறிவித்து வரவென மொழிந்தபின் சமுகமணுகி இராஜதரிசனஞ் செய்தனர். சிக்கராஜன் கல்வித்துறை கண்டவனாதலின் சின்னத்தம்பியின் பொருளாழ்ந்த மொழியினைச் சிந்தித்தான், அருள்கொண்டான். அன்றே அவருக்கு "சுங்கக்காரர்" என்னும்பெயரும், புகையிலைக்குமட்டுமல்ல, இன்னும் உள்ள பற்பல பொருட்கு மேற்பட்ட சுங்கத்தை வசூலிக்கும் பாத்தியதையும் வழங்கினன். அரசன்பால் விடைபெற்று ஊர்திரும்பிவந்து கவுண்டனுக்கு நடந்ததை ஓதி மகிழ்தூங்கவைத்தனர். கவுண்டன் பரவசமாயினன், தான் அபிமானித்தபிள்ளை சென்றவிடமெல்லாம் சிறப்பேற்று வருவதில் பெற்றதாயை விடப் பதின்மடங்கதிகமான பேருவகைபூத்தனன். சின்னத்தம்பியும் பெற்ற சன்னதுப்படி சுங்கச்சாலை யடைந்து பொறுப்பை யேற்றுக் கணக்கர் தண்டலாளர் ஏவலாளர்களோடு கச்சேரி செய்து பணம் வசூலித்தனர். தம்பி திறமையாலும், காலவிசேஷத்தாலும், விளைவோங்கலாலும், சுங்கவசூல்தொகை அதிகரித்து திறைப்பணம் காலங்களில் சரிவுற வருவதை அரையன்நோக்கிப் பிள்ளையை மற்றுமொருமுறை தனதுசமுகம்வரப் பணித்தனன். முன்னிலுஞ்சால நன்னிலைமையில் சின்னத்தம்பி இருந்ததால், குதிரையேறி முன்பின்பரிவாரத்தார் தொடர மைசூர் அடைந்து நல்லாடையணிந்து அரசன் சமுகஞ்சென்று தரிசித்து வந்தித்து வாழ்த்தினர். அரசன் அகமகிழ்ந்தவனாய் முகமலர்ந்து தம்பியைத் தன்முன் வீற்றிருக்க ஓதினன். வீற்றிருந்தனர். மந்திரி ஸ்தானீகர் முன்னிலையில் இவர் திறமையைவியந்து, பொற்பறையும், பொற்காளமும் விருதுகளாகக் கொடுத்தது மன்றி வரும் போதெல்லாம் நேரேவந்து தனது முன்னிலையில் வீற்றிருக்கும் சுதந்தரமும் அளித்தனன். இவைகளை ஏற்கும்போது தம்பி ஓ! இராஜாதிராஜனே! இராசசிங்கனே! இவைகளையேற்பது "அடுகளிற்றெறுத்தினிட்ட வண்ணப்பூந்தவிசு

தன்னை ஞமலிமே விட்டதொக்கும்” இவற்றிற்கு யான் பாத்திரன் அல்லேனென்று மிருதுவாகக்கூறி அரசனை வந்தித்தனர். பிறகு அரசனிடம் விடை பெற்றுத்திரும்பினர். அவ்வவையிலுற்றவர்கள் போற்றிப் புகழ்ந்தார்கள். தொழுகுலதெய்வம் என்றும் சின்னத்தம்பிக்கு அஷ்ட ஐசுவரியங்களும் நெடிதோங்கிவளர அருள்புரிய வாழ்த்தினார்கள். மார்புமீது ஜெயமாலை அணிந்தார்கள். பூமாது பொக்கென வந்து புல்லிக்கொண்டனள். நம்பி மைகுரைத் தேஜஸடைந்த முகத்தோடு விட்டுக் காளமாநகர் பொற்பறையடிக்கவும் பொற் காளமூதவும், நகரார் சின்னதம்பியைக்கண்டு எதிர்கொண்டழைக்க வந்து கவுண்டன் இல்லம்புகுந்து மார்போடுறத்தழுவி இருவரும் அன்று முதல் உயிரும் உடலும் போலும், பூவு மணமும்போலும், சொல்லும் பொருளும்போலும், பிரியாதுறைந்தார்கள். ஏகோபித்த மனத்தராய், ஒன்றுபட்ட செய்கையராய்க் காலங் கழித்தார்கள். இங்ஙனம் இருக்கும்போது ஒருநாள் இரவு அறுவகையுண்டி அமைவுறவுண்டு, தாம்பூலந்தரித்து இன்பார்ந்து இருவரும் தனித்தனியான பஞ்சணைமீதேறி அமர்ந்து, அளவளாவி அனந்த முக்கிய விஷயங்களைக்குறித்து வாக்காடினார்கள். நாழிகைபோனதை அவர்கள் அறிந்திலர், சம்பாஷணையில் அமிழ்ந்தார்கள். இராமன் வாலியைக் கொன்றநியாயம், முருகன் சூரனை முடித்தவிதம், கிருஷ்ணன் தருமனைப் பொய்புகலக் கூறியதுமன்றி, சக்கரத்தால் இரவியைமறைத்து மன்னன் தலையை வீட்டிய சூழ்ச்சியாதியவை ஒன்றின்பின் ஒன்றாக அவர்கள் பிரஸ்தாப விஷயங்களாக அமைந்தன. கடைசியாகக் கவுண்டன் தம்பியைநோக்கி, “தம்பீ! சூரனைமுருகன் முடித்ததும், வாலியை இராமன் வீட்டியதும் யெதற்காக?” என்றான். “துஷ்டசம்மாரஞ்செய்ய” வென்று சின்னத்தம்பி கூறினர். அதற்குக் கவுண்டன் “அத்தோடு மணம்புரிந்து கொள்ளவும், மனைவியை மீட்கவும் அல்லவா” என்றனன் சின்னத்தம்பி. “ஆமாம்” யெனக் கவுண்டன் சிறிதுநேரம் மவுனஞ்சாதித்தனன். இதற்குள் சின்னத்தம்பி நித்ராதேவியின் மாயவலைக்குட்பட்டு மெய்மறந்து கண்ணுறங்கினர்.

கா. ச. துரைசாமி.

---

## MERCY AND MUSIC.
## இரக்கமும் இன்னியமும்.

---

போர்ஷியா:—இரக்கமென் பதுபல வந்தத் தியைவதொன்
றன்று. விண்ணின்றிவ் வவனியின் மீதே
வீழ்ந்திடு மினிய மழைபோன் மேவும்.
அஃதிரு வகையா நன்மை யளிப்பது.
ஈவோ னேற்போ னென்றிரு வருக்கும்

ஏக காலத்தி லின்னல மீயும்.
உயர்வறு திறலினு முயர்வறு திறத்தது.
பட்டாபி ஷேகம் பெற்றபூ பாலற்
கவனது கிரீட மதனினுஞ் சிறந்தது.
தராதிபன் செங்கோல் தரணியி லவனது
அதிகா ரத்தி னடலுக் கறிகுறி.
தனக்கு மாட்சியுஞ் சனங்கட் கச்சமும்
தந்து விளங்கும். இந்தத் தரணியில்
இறைவர்க் கஞ்சுற விதனி னுவதே.
இரக்கமோ இச்செங் கோற்குமேம் பட்டதே.
இறைவர்க ளிதயசிம் மாசனத் திருப்பதாம்.
ஈசன் பல்குணத் தேற்றவோர் குணம். இத்
தயையநியா யத்தைச் சமனப் படுத்தினல்
தரணிப ராற்றல் சகதீ சனதுபோன்
ளொளிரு மன்றே. ஆதலின் யூத!
நியாயம் பெறலே நின்வழக் காயினும்
நீதி யொன்றையே நிமலன் கைக்கொளின்
எவரும் பரகதி யடையோம் இதைநினை.
பேரரு ளிறைசெயப் பிரார்த்திக் கின்றனம்.
அப்பிரார்த் தனைநா மனைவரும் பிறருக்
கிரங்கி யுதவிசெய் திடக்கற் பிக்குமால்.
நின்றன் வழக்கி னீதியுக் கிரத்தைச்
சமனப் படுத்தவித் தனையான் சாற்றினேன்.

லோரேன்சோ.—இக்கரை தனிற்சந் திரிகை யெத்துணை
இன்ப மாகத் தூங்குகின் றது. இவண்
நாம்வீற் றிருந்து நமது செவிகளில்
சங்கீ தத்தொனி சார்ந்திடப் பெறுவோம்.
இனியநிச் சத்தமும் இந்த விரவும்
ஆனந்தகான மதற்குவாய்ந் தவைகள்.
இருக்குக, ஜெசிக்கா எவ்வணம் வான்றலம்
அவிர்சிறு பொற்றட் டங்க ளழுத்திய
தென்ன இலங்கும், காண்டிநீ, காணுறும்
அதிகச் சிறிதா யமைவுறு மண்டமும்
தன்னியக் கத்திற் சதாஎவ் வனமுடைக்
கந்தரு வருக்கெதிர் கானம் பாடும்
தேவ தூதர்கள் சிவணப் பாடுமால்.
அத்தகை யின்னிசை நித்தமா மாவியில்

உளதா யினுமிம்மட் போர் வையுடை
சரீர மதையிழி வுறமூ டியதால்
அவ்விசை கேட்கலா காதவராவுளேம்.

(வாத்தியக்காரர்கள் வருதல்)

ஆ-ஆ, வம்மின், டயானு வையோர்
கீதந் தன்னுற் றுயினிக் கிடுமின்.
நனியுய ரினிய நாத முமதெஜ
மானி காதைத் துளைத்திட வாத்திய
முழக்குடனவளை யழைத்திலிற் சேர்மின்.

(வாத்தியம் முழங்கல்)

ஜெசிக்கா:—இன்னியங் கேட்டுமெக் காலுநான் மகிழ்ந்திலேன்.

லோரே:—உன்னுயி ரதனிடத் தோன்றலே காரணம்

இரத்தங் கொதித்துக் சதிக்கு மேதுவால்
கனைக்குபு மிக்க களிப்பொடு துள்ளி
ஓடுமுல் லாச முடைய துட்டக்
காலிக் கூட்டங் கைபழ காத
குதிரைக் குட்டிக் குழாஅ மாகிய
இவற்றைக் குறித்திநீ. இவைகளைக் காளத்
தோசை கேட்க வுறினு மியாவும்
ஏகமாக் குழீஇயின் றின்னிசை வலியாற்
றம்முடைக் கொடிய பார்வை சாந்தப்
பார்வைய தாகமா றிடுவது பாராய்.
ஆதலின் ஆர்வியஸ் விருக்கங் களையும்
கற்கள் வெள்ளங் களையும் தன்னுடை
இசையா லிழுத்தா னெனவிசைத் தனர்கவி.
ஏனெனிற் கான மியற்கையை மாற்றாத்
தன்மைசேர் வன்மையுஞ் சலமு மற்றுடைய
இயங்கியற் பொருள்க ளில்லையொன் றெனினும்.
சங்கீத ஞானஞ் சற்றுமில் லானும்
இன்னிய விசையா லிளகிடா தவனும்
இராஜ துரோகம் சற்பனை பறியிவை
தமக்குத் தகுதி யானவன் றனே.
அவன்றன் னுவியி னியக்க மிரவுபோல்
மனோகர மின்மையும் அவன்மன விகாரமும்
இயைந்து எரிபஸ்போ லிருண்மய மாகும்.

அத்தகை யாடவன் றனைநம் பந்த.
கானந் தனைநீ கவனித் திடுதியே.

கள்ளப்பிரான்பிள்ளை பி. ஏ.

---

## EDITORIAL NOTES.

## பத்திராதிபர் குறிப்புக்கள்.

---

அலெகஸாண்டர் பேயின்:—19 ம் நூற்றாண்டில் தத்துவஞான விசாரணையில் பேரெடுத்த நிபுணரிருவரும் 1903-ம் வரு முடியுமுன்னரே காலஞ் சென்றனர். ஹெர்பெர்ட் ஸ்பென்ஸர் சரித்திரத்தை இந்தசஞ்சிகையிற் காணலாம். பெயின் என்பவரின் சரித்திரச்சுருக்கம் அடுத்தமாத சஞ்சிகையில் கொடுக்கப்படும்.

*

பிரசங்கம்:—அன்னிபெசன்று அம்மாள் கல்வியைப்பற்றிச் சென்னையிலும் திருநெல்வேலியிலும் அனந்தசயனத்திலும் பிரசங்கித்தனர். உடற்கல்வி, அறிவுக்கல்வி, சன்மார்க்கக்கல்வி, ஞானக்கல்வி இவற்றில் தற்காலத்தில் அறிவுக்கல்வி சிறந்து விளங்குகிறதென்றும், சென்ற சிலவருடங்களாக உடற்பயிற்சி கவனிக்கப்பட்டு வருவதாயும் மற்றிரண்டு கல்விகளும் மதக்கோட்பாடு சம்பந்த முடையனவையாதலின் அவற்றை சர்க்கார் ஜனங்களுக்கே விட்டுவிட்ட நிமித்தம் அவை சூனியமாய்விட்டன வென்றும் கேட்டோர் மனமுருகக் கூறினர். அன்றியும், பெண் கல்வியைப்பற்றிப் பேசப்புகுந்ததும் அன்னார்க்குத் தக்ககல்வி இவ்வகைத்தென்று காட்டினர். சரீரப்பயிற்சி அவருக்கு உரியதே. மக்கட்பேறு மறுஜெனன மாதலினால் பெண்கள் தங்கள் உடலைப் பாதுகாத்த லவசியம். மக்களுக்கு அறிவூட்டி நல்வழிக்கொணரப் போதுமானகல்வியைத் தொட்டிலிலே புகட்டுவிப்போர் அன்னைகளாதலால் அவர்கள் கல்விகேள்விகளால் சிறப்புற்றிருத்தல் பெருநன்மை விளைக்குமென்பதற்கு ஐயமில்லை. ஆனால் இதற்குக் கலாசாலைப்பரீட்சைகள் தேறவேண்டுவதவசியமன்று. சமயல்வேலை செய்தல், வீடுமேற்பார்த்தல், பாத்திர பண்டங்களை ஒழுங்காயும் துப்புறவாயும் வீணாக்காமலும் வைத்தல், பிள்ளைகளை வளர்த்தல், பயிற்றல், வியாதிகளின் குணகுணங்களறிந்து சிகிச்சை செய்யத்தெரிதல், மூலிகை முதலானவற்றால் சில்லரை வியாதிகளுக்குக் கைகண்ட ஔஷதஞ்செய்தல், பிரயோகித்தல், இவ்வழிகளில் கொண்டாருக்குத் தக்கதுணையாதலே பெண்கள் சற்கும் கல்விப்பயனும். நம்முடைய மதத்தை நாம் மறந்தால் நாம் நசிப்போம் என்பது உறுதி.

இராமநாதபுரம் இராஜா:—இவர் கல்விடைச்சூரிச்சியிற் டிசம்பர்மீ காலஞ்சென்றனர். இவருடைய உடம்பை இவருடைய பந்துக்கள் தனித்தொடர் வண்டியில் வைத்து இராமநாதபுரத்திற்குக் கொண்டுபோய்த் தகனஞ் செய்தனர். இவரை இராஜரிஷி எனலாம். இவருக்குச் சைவப்பற்றுமிகுதி. சிவத்தைப்பற்றி இவர் பிரசங்கஞ்செய்ததைக் கேட்டவர் இவர் மகாபக்திமான் கல்விமானென்றனர். தமிழ்க்கல்வியன்றி ஆங்கிலத்திலும் இவர் பயிற்சி சிறந்திருந்தது. தமிழ்வளர்த்தற் பொருட்டுத் தக்கோர்க்குத் தக்கவுதவி புரிந்துவந்தனர். காங்கிரஸ் முதலான நாட்டுவிருத்தியைக் கருதும் சபைகளுக்கும் இவர் செய்துவந்த திரவியசகாயம் பெரிதேயாம். இவரை இழந்த தமிழும் தமிழ்நாடும் துக்கசாகரம் நீந்துமோ அறியோம்.

*

தர்மபாலர் நிருபம்:—இவர் அமெரிக்காவினின்று கல்கத்தாவிலுள்ள சுரேந்தரநாத்பானர்ஜி என்பவருக்குக் கல்வியைப்பற்றி விடுத்தநிருபங் கவனிக்கத்தக்கதே. கிருஷிக்கல்வியும் கைத்தொழிற் கல்வியும் நம் வாலிபருக்கு இன்றியமையாதனவாம். 5-முதல் 14-வயதிற்குள் நஞ்சிறுவர் கபடம் சுயநயம் அடிமைத்தனம் இவற்றைக்கல்லார். இந்தக்காலவரையில் உழவுத்தொழிற்படிப்பையும் கைத்தொழிற்படிப்பையும் கற்றுவருகின்றனர் நியூயார்க்கு வாலிபர் என்று அவர் கூறி, அமெரிக்கர் கல்வி விஷயத்தில் கணக்கற்ற திரவியத்தைச் செலவுசெய்து வருவதால் அந்நாடு முன்வந்திருக்கின்றது என்று வற்புறுத்துகின்றனர். ஒவ்வொரு பிரதானபட்டணத்திலும் கிருஷிக் கல்விச்சாலையை ஏற்படுத்தி ரூ. 8000-செலவுசெய்து அமெரிக்க வாத்தியை வரவழைத்து உழவுத்தொழில் விருத்திசெய்தல் முக்கியமென்று மன்றாடுகின்றனர்.

*

நீலாங் ஞாபகச்சின்னம்:—டம்பாய் நகரவாசிகளில் மணிகளாய் விளங்கிய மூவரில் நீதிபதி நீலாங்கென்பவர் 1893-ம் ஆண்டில் பரகதியடைந்தனர். அவருடைய ஞாபகம் நிலைசிற்றற்பொருட்டு மொம்பாபுரிக் கனவான்கள் 32,000-ரூபாய் சேர்த்து எல்பின்ஸ்டன் கல்லூரி மாணவர்கள் தங்கிவசிக்கத்தக்க கட்டிடங்கட்டத் தீர்மானித்து சென்ற செவ்வாய்க்கிழமை 19 உயன்று சட்டிட வாரம்பநாட்செய்தனர். அன்று அவ்விராஜதானி யதிபதியாகிய லேமிங்டன் பிரபு நீலாங்கைப்பற்றிப் புகழ்ந்துபேசிக் சட்டிட அடிவாணக்கல்லையூன்றினர். வந்திருந்த கனவான்களனைவரும் கரகோஷஞ் செய்தனர்.

*

பெருவாரிநோய்:—சற்காலத்தில் பிளேக் எனப்படும் இக்கொடியநோய் பல்லாரி கோயமுத்தூர் இரண்டு பட்டணங்களிலும் பரவிக் குடிகளை ஊரை விட்டு ஓட்டிவிட்டபடியால் இவ்விரண்டிடங்களிலுமுள்ள கலாசாலைகள் இந்

தவருஷத்தில் மார்ச்சுமாதம் வரை திறக்கப்படுமோவென்று ஐயமுறநேரிடு கின்றது. திறந்தாலும் பிள்ளைகள் வருதல் அரிது. குறைந்தது இரண்டு வருடம் வரை இவை கஷ்டப்படும் என்பது உறுதி.

*

மாணிக்கவாசகர் காலநிர்ணயம்:—இத்தலைச் சாத்திட்ட வியாசமொன்று இம்மதிக் கிறிஸ்தவ கலாசாலைப் பத்திரிகையில் ஆர். எஸ். வேதாசலப்பண்டிதர் பெயரால் வெளிவந்திருக்கின்றது. அது பெரும்பான்மையும் அவ்விஷயத்தைப்பற்றி முன்னெழுதியோர்களது அபிப்பிராயங்களைச் சங்கிரகமாகக் கூறுமுகத்தான் சிலவிடங்களில் மறுக்கவுஞ் செய்கின்றது. ஷை பண்டிதர், மாணிக்கவாசகர் கி. பி. மூன்றாம் நூற்றாண்டிலிருந்தவராக ஒருவாறு முடித்துக்காட்டுகின்றார். பண்டிதரது துணிபுகளுட்சில கற்றறிந்தோர் பலர்க்குப் பொருந்தாதென்பதை அவரே எதிர்பார்த்துக் கூறியுள்ளார். வீரசைவங் கன்னடதேயத்துத் தழைத்தோங்கிய காலம் வசவண்ணர் காலமாகிய கி. பி. பதினோராம் நூற்றாண்டுத் துவக்கமாயினும் அதன் முன்னர் தமிழ் நூல்களுள் அப்படி யொருசமய முண்டென்று யாமறிந்தவளவிற் கேட்கப்படவில்லையாயினும் பண்டிதர் சுந்தரமூர்த்திகள் காலத்து அச்சமயந் தழைத்தோங்கியிருந்ததென்று வெறுங்கூற்றாகவே கூறி அதனை யடிப்படையாகக் கொண்டு மாணிக்கவாசகர் காலத்தை வரையறுத் தொழித்தார். பிரபுலிங்க லீலை முதலான நூல்கள் மாணிக்கவாசகரையே சிறப்பித்துக் கூறுவனவென்று வாளாது சுட்டினார். முதலான நூல்கள் எவையென்று தெரியவில்லை. தக்கமேற்கோள்களோடும் தக்க ஆதாரங்களோடும் பண்டிதர் தங்கொள்கையை நிறுத்துவாரென எதிர்பார்க்கின்றோம். இவ்விஷயத்தைப்பற்றி யாராய்ச்சி செய்து பின்னர் எழுதுவோம்.

*

மதுரைத் தமிழ்ச் சங்கம்:—1903ஸ்ரீ டிசம்பர்மீ 21,22-ந்தெய்திகளில் இச்சங்க வித்வான்கள் கூடி 22 தீர்மானங்கள் செய்தனர். அவற்றுள் முக்கியமானவற்றை இவண் சுருக்கமாய்த் தருகின்றாம்.

1. சங்கத்தின் அங்கத்தினர் வருஷமொன்றுக்கு மார்ச்சுமீ 31உக்குள் 6 ரூபாய் சந்தாத்தொகை செலுத்திவரவேண்டும். அவர்கட்குச் செந்தமிழும் சங்கத்தார் பதிப்பிக்கும் புத்தகங்களும் அனுப்பப்படும். சந்தாவனுப்ப இயலாதவர்களை கௌரவ அங்கத்தினராகமட்டுங் கொள்ளப்படுமாதலால் அன்னாருக்குப்பத்திரிகையும் புத்தகங்களும் அனுப்பப்படமாட்டா. [கௌரவம் எங்ஙனம் ?]

2. ஒவ்வொரு அங்கத்தினரும் முதலிற் பிரவேசதனமாக ரூபாய் 5 அனுப்பவேண்டும்.

3. வருஷாந்தரக் கூட்டத்திற்குவரும் அங்கத்தினர்கட்கு இருப்பிடமும் ஊண்வசதியும் திரும்புதற்குரிய செலவு தொகையும் சங்கமளிக்கும். [போக்குவரவு செலவிற் பாதிபோன்றும்.]

4. பி.ஏ. எப்.ஏ. மாணக்கர்கட்குத் தமிழ் சரித்திரப்பாடங்களும் ஏற்படுத்தவேண்டும். [அவசியகம்.]

5. சங்கத்தார் பிரவேச பண்டிதர், பால பண்டிதர் பண்டிதர் எனப் பெயருள்ள மூன்று தனித்தமிழ்ப் பரீட்சைகள் ஏற்படுத்தவேண்டும். அவற்றிற்குப் பாடங்களையும் பரீட்சாகாலத்தையுங் குறிப்பிடவேண்டும். (அவை குறிக்கப்பட்டன.) அன்றியும் மூன்று பரீட்சைகளுக்கும் முறையே 1,2,3 - ரூபாய் கட்டணம் விதிக்கப்படவேண்டும். இப்பரீட்சைகளில் ஒவ்வொன்றிலும் முதல் வகுப்பில் தேறும் மூவருக்குத் தங்கப்பதக்கங்களும் தோடாக்களும் பணப்பரிசுகளும் அளிக்கவேண்டும். [பிரவேசத்திற்கு 50. 30, 20 ரூபாயும், பாலபண்டித பரீட்சைக்கு 70, 50, 30 ரூபாயும், பண்டித பரீட்சைக்கு 100, 70, 50 ரூபாயும்)

6. சென்னை இராஜதானியில் ஆங்கில மாணக்கர்க்கு நடத்தப்படுந் தமிழ்ப்பரீட்சைகள் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் நடத்தப்படும்.

7. குறித்த நிபந்தனைகளுக்குட்பட்டுச் சேரவிரும்பும் சங்கங்களைக் கிளைச்சங்கங்களாக அங்கீகரித்தல்வேண்டும். [திருநெல்வேலி 'சரஸ்வதி விலாச சபை' கிளைச்சங்கமாகக் கொள்ளப்பட்டது.]

**பன்னிரு பெண்மணிகள்.**—ஷேக்ஸ்பியர் நாடகங்களிற் சிறந்தனவற்றிலுள்ள கதாநாயகிகள் பன்னிருவரின் கதைகளைச் சுருக்கிப் படிப்பனைகளுடன் தெளிவான நடையில் நல்ல காகிதத்தில் புதுமாதிரியான அச்சு எழுத்தில் பதிப்பித்திருக்கின்றோம். விலை அணா - 6. ரிப்பன், ஹிக்கியம்பாதம், முதலான சென்னைப் புத்தக விற்பனைசாலைகள் இதை விற்கின்றன.

# Jnana Bodhini.

TERMS OF SUBSCRIPTION:—

| | | |
|---|---|---|
| India, Ceylon, Yearly | ... ... | Rs. 2—8—0 |
| Africa, &c. ,, | ... ... | 5 shillings. |

**Terms of Agency**—Two Annas per Rupee of Subscriptions collected and remitted. A copy of the Journal will be sent free to every Agent who gets at least 10 Subscribers.

Agents are wanted in Madura, Trichinopoly, Tanjore, Kumbakonam, Cuddalore, Chidambaram, Chingleput, and Salem, Jaffna and South Africa.

**Agents approved.**

**Tinnevelly Town**—T. V. Chidambaram Pillai.

**Satur**—S. A. Somasundram Pillai.

**Colombo**—K. Purnalingam Pillai.

TERMS OF ADVERTISEMENT.

| | Yearly. | Half-yearly. |
|---|---|---|
| One full page | ... Rs. 18 | ... Rs. 10 |
| Half page | ... ,, 10 | ... ,, 6 |

Apply to

*The Editor,*

**"Jnana Bodhini," Coimbatore.**